விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

VIJEAY Complex
www.vijeaycomplex.com

உங்கள் அனைத்து மங்கள நிகழ்வுகளையும் கொண்டாடி மகிழ்ந்திட எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
0033687713427
021 221 2899/077 723 0104/077 449 6386
No.199, Chundikuli - Columbuthural Road, Jaffna.

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 14 சனிக்கிழமை (27.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 098

## யாழில் கொரோனா தாண்டவம்
## 3 நாட்களில் மட்டும் 133 பேருக்கு தொற்று
### மொத்த தொற்று 820 ஆக உயர்வு

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களில் மட்டும் 133 பேருக்கு 19

## சிறீதரன் எம்.பியின் மகன் மீது வீடு புகுந்து தாக்குதல்
### 8 பேர் கொண்ட குழு அடாவடி



(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் மகன் மீது 8 பேர் கொண்ட இளைஞர் குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். 19

# யாழ்.போதனாவில் கொரோனா கொத்தணி
## மருத்துவர்கள், தாதி உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் உட்பட 19 பேருக்கு தொற்று



*(யாழ்ப்பாணம்)*
யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிய கொரோனா கொத்தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
யாழ்.போதனாவில் மருத்துவர்கள், தாதி உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் உட்பட 19 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். *(19ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ்.பல்கலைக்கு கனேடியத் தூதுவர் நேற்று விஜயம்

(யாழ்ப்பாணம்)
கனேடிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் தேசிய மொழிகள் 19

## கொக்குவிலில் இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
கொக்குவில் பகுதியில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இதில் தாவடி தெற்கு கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 19

## யாழ்.போதனாவில் 19 பேர் உட்பட வடக்கில் 29 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தில் மேலும் 29 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.
அவர்களில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவ சேவையாளர்கள் உட்பட 19 பேருக்கு தொற்று உள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் போதனா வைத்திய 19

## நிலாவரை அகழ்வாராய்ச்சி
### மக்களின் எதிர்ப்பையடுத்து நிறுத்தம்



03

## இலங்கைக்கு எதிரான விசாரணைக்கு 12 புலனாய்வாளர்களை நியமிக்க ஐ.நா ஒப்புதல்

(ஜெனிவா)
இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு 2.8 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுவதாக தகவல்கள் வெளியாகி 19

## பளையில் கார் - டிப்பர் விபத்து இரு சிறுவர்கள் உயிரிழப்பு
### தந்தை படுகாயம்



(பளை)
கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பளைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரு சிறுவர்கள் உயிரிழந் 19

## அரசின் கைக்கூலிகளாக சில தமிழ்க் கட்சிகள்
### சுமந்திரன் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)
ஐ.நா.மனித உரிமை பேரவையின் பிரேரணையினை தோற்கடிக்க வேண்டுமென்று இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து கைக்கூலி 19

## வரணியில் வன்முறை கும்பல் வீடு புகுந்து அட்டூழியம்

(யாழ்ப்பாணம்)
யாழ். வரணி பகுதியில் வீடொன் 19

## சைக்கிளிலிருந்து கீழே விழுந்த முதியவர் மரணம்
### மருதனார்மடத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
துவிச்சக்கரவண்டியிலிருந்து கீழே விழுந்து படுகாயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.
இதில் மாவிட்டபுரம் தெல்லிப்பழையைச் சேர்ந்த முத்தையா செல்லத் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## Dr. பரமநாதன் சுரேசன்

( மருத்துவப் பொறுப்பதிகாரி – மூலிகைத் தோட்டம், திருநெல்வேலி )



அவர்களின் மரணச்செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னார் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் பிரதி ஆணையாளராக கடமையாற்றிய காலத்தில் எமது கல்லூரியின் செயல்பாட்டுக்கு வழங்கிய பங்களிப்பையும் கருத்தரங்குகள், பயிற்சிகளில் பங்குபற்றி வழங்கிய ஆக்கபூர்வமான ஒத்துழைப்புக்களையும் இச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.


அவரின் இழப்பால் பெரும் துயருற்றுள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தலைவர், பணிப்பாளர், வட இலங்கை சுதேச மருத்துவ சபை
தலைவர், உறுப்பினர், அபிவிருத்திக் குழு
மற்றும் அதிபர், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள்
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, சுன்னாகம்.

(C-1824)

# பண்டிதர் பொன்னம்பலவாணர் காலமானார்



(குப்பிழான்)

பொன்னாலை சித்திவிநாயர் ஆலய அர்ச்சகரும், சிறந்த கல்விமானுமான பண்டிதர் பொன்னம்பலவாணர் நேற்று வெள்ளிக்கிழமைபிற்பகல் காலமானார்.

கடந்த- 20 ஆம் திகதி சனிக்கிழமை மதியம் யாழ்.நகரில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது இராணுவ வாகனம் மோதியமையால் பண்டிதர் பொன்னம்பலவாணர் படுகாயமடைந்தார். இதனையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டார்.

கடந்த ஆறு நாட்களாக சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் பிற்பகல் காலமானார்.

(ம -3.18.104)

# யாழ். போதனாவுக்கு வருவதை தவிருங்கள்

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் சேவைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வசதியாக தேவையற்ற வருகைகளைத் தவிர்க்குமாறு நிர்வாகம் கேட்டுள்ளது.

போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை உள்ளிட்ட அனைத்து மருத்துவ சேவைகளும் சுமுகமாக முன்னெடுக்கப்படும் என்று பிரதிப் பணிப்பாளர், மருத்துவர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

(ம-03)

விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

# அஞ்சலி நிகழ்வு இரத்துச் செய்தல்

கடந்த 07.03.2021 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எமது தாயார்

**திருமதி வைத்திலிங்கம் கனகம்மா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை நாளை (28.03.2021) ஞாயிற்றுக்கிழமையும் நாளை மறுதினம் (29.03.2021) திங்கட்கிழமையும் நடாத்தப்படவிருந்த நிலையில் தவிர்க்கமுடியாத தற்போதைய நாட்டு நிலைமையையும் சுகாதார வைத்திய அதிகாரி அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் நிலைமையின் பாரதூரத்தையும் கருத்தில் கொண்டு இரத்துச் செய்துள்ளோம் என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனால் தங்களுக்கு ஏற்பட்ட
அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.

வீ. வை. யோகலிங்கம்
இல. 880 / 4, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
077 194 8052

தகவல்
குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

நன்றி நவிலலும்



## சின்னையா ரமேஸ்வரன்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா ரமேஸ்வரன் பிரான்சில் கடந்த 24.02.2021 (புதன் கிழமை) சிவபதமடைந்தார்.

அன்னார் சிவபதமடைந்த செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறிய வர்களுக்கும் இறந்த செய்தி. கேட்ட நிமிடம் முதல் சகல வழிகளிலும் உதவி செய்த அயலவர்களுக்கும் உறவினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றைய தினம் (26.03.2021) வெள்ளிக்கிழமை பிரான்சிலும் அன்றைய தினம் ஆத்மசாந்திப் பிரார்த்தனை கோண்டாவிலிலும் கொரோனா பரவலை முன்னிட்டு வெகு சுருக்கமான முறையில் நிறைவேற்றப்பட்டது என்பதை மிகவும் மனவேதனையுடன் அறியத் தருகின்றோம்.


மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

(6357)

தகவல்
குடும்பத்தினர்

# என்றும் எங்கள் நினைவுகளில்...

**25 ஆம் ஆண்டு**



அமரர்
**பண்டாரி இராயப்பு**
பிறப்பு : 25.04.1927
இறப்பு : 27.03.1996

**21 ஆம் ஆண்டு**



அமரர்
**எலிசபேத் இராயப்பு**
பிறப்பு : 08.06.1929
இறப்பு : 13.06.2000

**6 ஆம் ஆண்டு**



அமரர்
**Rev.Fr. இராயப்பு மரியநாயம் (O.M.I)**
பிறப்பு : 13.05.1948
இறப்பு : 23.10.2015

உயிரோடு இருக்கும்போது என்னிடம்
நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார் (யோவான் 11:26)

(6348)

குடும்பத்தினர்

# வீடு வாடகைக்கு

யாழ். நகரில் சகல தளபாட வசதிகளுடன் கூடிய வீடு குறுகிய கால எல்லைக்கு கொடுக்கப்படும்.
(15 நாள் தொடக்கம் 1 மாதம் வரை)

(6361)

☎-077 285 0753

# மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(6118)

☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் எல்லா இனத்தவர்களுக்குமான வரன்கள் உள்நாடு, வெளிநாடு, அரச உத்தியோகம், அரச சார்பற்றவர்கள் உட்பட எல்லாவித மணமக்களும் எம்மிடம் உண்டு. எல்லா மணமகள், மணமகனாயினும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு

(6358)

நல்லூர் கந்தன் திருமண சேவை
வி. ஜெயந்தி 077 973 3183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லியல் திணைக்களத்தின் நிலாவரை அகழ்வுப் பணிகள் மக்களின் எதிர்ப்பை அடுத்து நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம்-வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட புத்தூர் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினரால் நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ் வாராய்ச்சி பணிகள் மக்களின் எதிர்ப்பை அடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.**





கடந்த மாதம் அகழ்வாராய்ச்சி பணி இடம் பெறும் போது எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டதை அடுத்து குறித்த அகழ்வாராட்சியானது நிறுத்தட்ட நிலையில் நேற்று மீண்டும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதனால் குறித்த பகுதியில் அதிகளமான மக்கள், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் ஒன்று கூடியதையடுத்து மக்களின் எதிர்ப்பின் பிரகாரம் அகழ்வு நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. (நி-4-18-33)

## நவீன தொழில்நுட்பங்களுடன் காணி அளவீடு

(கொழும்பு)

காணிகளை அளவிடும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட நடமாடும் சேவை நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்படுவதாக காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

காணிகளை அளவிடும் நடவடிக்கை தாமதமாகியிருப்பதால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

நடமாடும் சேவை ஊடாக இதற்கு தீர்வு காண முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

## இந்திய மீனவர்கள் 20 பேர் விடுதலை

(திருமலை)

திருகோணமலையில் கைது செய்யப்பட்ட 20 இந்திய மீனவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார். (நி-4)

## மக்களுக்கு என் மீதான நம்பிக்கை குறைய எனது அமைச்சர்களே காரணம்

### பாராளுமன்றில் மைத்திரி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தம் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்தார்.

தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி அறிந்திருந்ததாகவும் பொறுப்பின்றி நடந்து கொண்டதாகவும் தமது அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்கள் சிலர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தமை, மக்களுக்கு தம் மீதான நம்பிக்கை குறையக் காரணமாகவிருந்ததாக முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

அமைச்சர்கள் சிலர் மக்கள் மத்தியில் முன்னெடுத்த பொய்யான பிரசாரங்கள் காரணமாகவே தம் மீது பிழையான நிலைப்பாடு மக்களுக்கு ஏற்பட்டதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். மக்களுக்கு பொய்களைக் கூறி உருவாக்கப்பட்ட நிலைப்பாடே அது வென சபாநாயகருக்கு மைத்திரிபால சிறிசேன தெளிவுபடுத்தினார். (நி-4)

## வடக்கில் எகிறும் தொற்று; பாடசாலைகளில் பிரார்த்தனைகளுக்கு தடை

(கொழும்பு)

கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதன் காரணமாக பாடசாலைகளில் காலை நேர பிரார்த்தனைகளுக்காக மாணவர்களை ஒருங்கிணைத்து பிரார்த்தனை நடத்துவதை தவிர்க்குமாறு வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி எதிர்வரும் மே மாதம் வரை வகுப்பறைகளிலேயே காலை நேர பிரார்த்தனைகளை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## ஐ.நா.தீர்மானத்தை அமுல்படுத்தும் நிதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை கட்டலாம்

### அறிவுரை கூறுகிறார் வெளிவிவகார அமைச்சர்



(கொழும்பு)

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்தை அமுல்படுத்தும் நிதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கலாம் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானம் குறித்து வெளி விவகார அமைச்சின் விசேட அறிவிப்பை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஐ.நா. தீர்மானத்தை அமுல்படுத்த அதிகமான நிதி செலவழிக்கப்படவுள்ளது. அது பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக செலவழிக்கப்பட்டால் ஆரோக்கியமாக இருக்கும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை பாரிய நிதி நெருக்கடியில் இருக்கும்போது, மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களைச் செலவழித்து பொறிமுறைகளை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றது.

இலங்கையின் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டும்.

யாழ். குடாநாட்டில் ஆயிரக்கணக்கான வீடுகளை நிர்மாணிக்கவும் யாழ்ப்பாணம் உட்பட ஏனைய பகுதிகளுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றவும் ஐ.நா. தீர்மானத்தை அமுல்படுத்தும் நிதி பயன்படுத்தப்பட வேண்டும் என தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (நி-4)

## தபால் பொதி ஊடாக 4 ஆயிரம் போதை மாத்திரைகள்



(கொழும்பு)

டுபாய் மற்றும் பிரான்சிலிருந்து தபால் பொதியூடாக இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள 4 ஆயிரத்திற்கும் அதிகமான போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா உள்ளிட்ட வெவ்வேறு போதைப்பொருட்கள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கையில் தபால் மூலம் போதைப்பொருள் வியாபாரம் முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமையவே இவை கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை – மே.தீவுகள் முதல் டெஸ்ட்

# சமநிலையில் நிறைவு

இலங்கை மற்றும்மேற் கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி ஆண்டிகுவாவில் நடை பெற்றது.

டாஸ் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி இலங்கை முதலில் களமிறங்கி யது.

இலங்கை அணியின் தொடக்க ஆட்டக் காரர் திரி மன்னே மட்டும் அரை சத மடித்து 70 ஓட்டங்களில் அவுட் டானார்.

விக்கெட் கீப்பர் டிக்வெல்லா 32 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந தார். இறுதியில், இலங்கை அணி 69.4 ஓவரில் 169 ஓட்ட ங்களுக்கு ஓல் அவுட்டானது.

மேற்கிந்திய தீவுகள் சார்பில் ஜேசன் ஹோல்டர் 5 விக்கெட்டும், ரோச் 3 விக் கெட்டும் கைப்பற்றினர்.

மேற்கிந்திய தீவுகள் அணி முதல் இன்னிங்சில் 291 ஓட்டங்களில் ஓல் அவுட் டானது. கார்ன் வெல் 61 ஓட்டங்களிலும் போனர் 31 ஓட்டங்களிலும் கேம்ப் பெல் 42 ஓட்டங்களிலும் கைல் மேயர்ஸ் 45 ஓட்டங்க ளிலும் அவுட்டாகினர்.


இலங்கை அணி சார்பில் சுரங்கா லக்மல் 5 விக்கெட்டும், சமீரா மற்றும் பெர்னாண்டோ தலா 2 விக்கெட்டும் வீழ்த் தினர்.

102 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இலங்கை அணி இரண்டாவது இன் னிங்சை தொடங்கியது. தொடக்க ஆட்டக் காரர் லஹிரு திரிமான்னே பொறுப்புடன் ஆடி அரை சத மடித்தார். அவர் 76 ஓட்டங்களில் அவுட்டானார். சிறப்பாக ஆடிய ஒஷாடா பெர்னாண்டோ 91 ஓட்டங் களில் வெளியேறினார.

இலங்கை புதுமுக வீரர் பதும் நிசன்கா அபாரமாக விளையாடி சதம் அடித்தார். தனது முதல் டெஸ்டிலேயே அவர் செஞ்சுரி அடித்து சாதி த்தார். 6 ஆவது வீரராக ஆடிய நிசன்கா 103 ஓட்டங்கள் குவித்தார்.

அந்த அணி 476 ஓட்டங் கள் குவித்து ஓல் அவுட் ஆனது. இதனால் மேற்கிந்திய தீவுக்கு 375 ஓட்டம் இலக்காக நிர்ணயிக் கப்பட்டது.

இதையடுத்து மேற்கிந்திய தீவுகள் அணி களமிறங்கியது. அந்த அணியின் போனர் சதமடித்து அசத்தினார். அவர் 112 ஓட்டங்களில் வெளியேறினார். கைல் மேயர்ஸ் அரை சதமடித்து 52 ஓட்டங் களில் அவுட்டானார்.



இறுதியில், மேற்கிந்திய தீவுகள் அணி 4 விக்கெட் இழப்புக்கு 236 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. ஆட்ட நாயகன் விருது போனருக்கு வழங்கப்பட்டது. இதன்மூலம் இரு அணிகளு க்கு இடையிலான முதல் டெஸ்ட் டிராவில் முடிந்தது.

இரு அணிகளுக்கு இடை யிலான இரண்டாவது டெஸ்ட் ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறுகிறது. (4)

# கேள்வி அறிவித்தல்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத் திட்டம் - 2021
## உள்ளூராட்சி திணைக்களம்
## கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

1. **கரைச்சி பிரதேச சபையின்** மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி குறித்த வேலைத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. **தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி** சார்பாக தகுதிவாய்ந்த ஒப்பநதகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப் படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **வீதி அமைப்புக்கான சிடா (CIDA)** பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், **கேள்வி ஆவணம் பகுதி 4இல்** குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5)** கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. குறித்த பெறுகை 03/2020, 03/2020 (i) இலக்கங்களை உடைய 09.10.2020, 11.01.2021ஆம் திகதிகளின் பொதுநிதி சுற்றுநிருபங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. (தொலைபேசி: 021 228 5761, தொலைநகல்: 021 228 5690, E-Mail: kilinochchi1kps@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல் களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் 14.00 மணி வரை 12.04.2021ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி** எனும் இடத்திலிருந்து 29.03.2021ஆம் திகதியிலிருந்து 12.04.2021 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.2,000/= (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி** எனும் முகவரிக்கு 12.04.2021ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்கள் **(எழுபத்தேழு நாட்கள் - 28.06.2021)** வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்ட வாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரு) மில்லியன் (With out Vat) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும்கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியா கும் காலம் |
| NP/KI/KAPS/PSDG/01/2021 | கிளிநொச்சி மருதநகர் உதயதாரகை விளையாட்டு மைதான வீதி | 7.206 Mn | 90 நாட்கள் | C5,C6,C7 (ROAD WORKS) (Highway) | 80,000.00 | 26.07.2021 |

கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 05.04.2021ஆம் திகதி காலை 10.30 மணிக்கு **தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி** அலு வலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

**தவிசாளர்**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**
**27.03.2021**

(C1825)

# ஸ்கந்தா ஸ்ரார் வெற்றிக்கிண்ணம்
# 2ஆவது சுற்றில் சென்றலைட்ஸ்

ஸ்கந்தா ஸ்ரார் வெற்றிக் கிண் ணம் 2021 தொடரினை ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகம் முதல் முறையாக நடத்தும் 30 பந்து பரி மாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

முதல் போட்டியில் சென்ற லைட்ஸ் அணி றெஜின்போ அணியை 147 ஓட்டங்க ளால் வெற்றி பெற்று இரண் டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தா டிய சென்ற லைட்ஸ் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 261 ஓட்டங் களைப் பெற்றது.

சாரங்கன் 42, பிரியலக் ஷன் 34, இயலரசன் 13, டார்வின் 33, வியஸ் காந் 27, கௌதமன் 30, நிறோசன் 20, செல்ரன் 20 ஓட் டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் றெஜின்போ சார்பாக ஜெயசிங்க 3, யதூசன், முருகதாஸ் தலா 2, செந்தூரன், நிதர்சன் தலா ஒரு இலக்குகளையும் கைப் பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றெஜின்போ அணி 29.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றன.

டிலசன்-35,சிம்ஸன்-20, ரஜீபன்-15, செந்தூரன் 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் சென்ற லைட்ஸ் சார்பாக நிறோசன் 3, நிதர்சன், வியஸ் காந் தலா 02, டார்வின், நிசான், பிரியலக்ஷன் தலா ஒரு இலக்கினை யும் கைப்பற்றினர். (4)

# கிறாஸ்கொப்பர்ஸ் அணி
# பிளே ஓவ் சுற்றுக்கு தகுதி

மேற்படி தொடரில் 5 ஆவது தகுதி காண் போட்டி கடந்த 14ஆம் திகதி கொக்கு வில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் கிறாஸ் கொப்பர்ஸ் அணி, கே.சி.சி.சி. அணியை 94 ஓட்டங்களால் வெற்றி பெற்று, பிளே ஓப் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 30 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 243 ஓட்டங்க ளைப் பெற்றது.

கோகுலன் 36, மயூரன் 16, கிருஷான் 39, வாலக்ஸன் 15, சுஜீபன் 24, அஜித் 22, ரசிக ரன் 34, ஜனன்தன் 12 ஓட்ட ங்களைப் பெற்றனர்.


களத்தடுப்பில் கே.சி.சி.சி. அணி சார்பாக சத்யன் 3, பிர தீஸ் 2, நிரூசிகன், சாம்பவன், கஜானன், துஸ்யந்தன் தலா ஒரு விக்கெற்றுக்களைக் கைப் பற்றினர்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி.அணி 24.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 149 ஓட்டங்க ளைப் பெற்றது.

யனுதாஸ் 25, பானுஜன் 28, துஸ் யந்தன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். களத் தடுப்பில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி சார் பாக சுஜீபன் 3, மதூஸன், ஜனன்தன், ரசி கரன் தலா 2 இலக்கினையும் அஜித் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரின் மத்திய பகுதியில் தொற்று நீக்கும் நடவடிக்கை





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரின் மத்திய பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு தொற்று நீக்கி விசுறும் நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தின் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் நேற்றுமுன்தினம் மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியின் அவசர கூட்டம் இடம் பெற்றிருந்தது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம் பெற்ற குறித்த கூட்டத்தின் போது பல தீர்மாணங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக யாழ் நகர பகுதியில் அதிகளவான பொலிஸார், இராணுவத்தினர், சுகாதார துறையினர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் காணப்படுவதை அவதானிக்க முடிந்துள்ளது. (நி-4-33)

---


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCY

The University of Jaffna, Sri Lanka will entertain applications from suitably qualified persons for the following posts:

**1.TECHNICAL OFFICER (AUDIO VISUAL) GRADE III**
**Qualifications:**

i) Should pass in three (3) subjects at the G.C.E (A/L) examination in any stream
**AND**
ii) a) Having obtained a certificate of proficiency not below than the N.V.Q level 5 in the field of Electronics and Telecommunication/Electronics/Multimedia or Audio Visual Techniques from an institution recognized by Territory and Vocational Education Commission or a statutory institution which has been established by an act passed by the parliament.
**OR**
b) Having obtained technical qualifications in the field of Electronics and Telecommunication /Electronics/Multimedia or Audio Visual Techniques accepted as equivalent to the above qualification of (ii)(a) by Tertiary and Vocational Education Commission with one year experience in Audio Visual work in reputed organization.

Age limit : Should not be less than 18 years and not more than 45 years
Salary Scale : U-MT1 (III) - Rs.31,625–7X300; 10X355-37,275 p.m
Selection : By written and / or practical test and an interview

**2.SUPERVISOR (CIVIL), GRADE III**
**Qualifications:**

i) National Certificate in Technology or equivalent qualifications with 3 years' experience may be obtained while following the NCT course;
**OR**
ii) G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with at least 5 years' experience as a Supervisor in the relevant field in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment.

Age limit : Should not be less than 18 years and not more than 40years
Salary Scale : U-MT1 (III) - Rs.31,625-7x300;10x355-37,275 p.m.
Selection : By Interview


**STATUTORY BENEFITS**

1.Allowances approved by the University Grants Commission
2.Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3.Gratuity payment
4.Employment Trust Fund benefits
5.Free medical care

Applications should be on **specified form (for each post)** issued by the University. Application Form and other particulars for the above posts can be **downloaded only from the University website - www.jfn.ac.lk**.

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna** Collection Account Number: **970000090000387**. A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.

**Sample Deposit Slip is given below:**




All the Educational / Professional qualifications and experience obtained as at the closing date of the applications will only be considered when evaluating the candidates. Application without the copy of the supportive documents for Educational / Professional and Experience **will be rejected.**

The envelope containing the duly filled application form must bear title of the post which you are applied for on its top left hand corner and send under registered post to reach us on or before **27.04.2021** to the following address.

**Deputy Registrar/ Non-Academic Establishments,**
**University of Jaffna,**
**P.O. Box 57,**
**Thirunelvely,**
**Jaffna**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. How ever, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.
In complete and illegible applications and applications that are received after the closing date will be rejected with out intimation.

REGISTRAR,
University of Jaffna.
26.03.2021

(C-1822)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்கான இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு உரும்பிராய் ஓடயம்பதி அருள்மிகு ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் இடம்பெறும்.

"ஆலயதரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

# சிங்கள பௌத்த பேரினவாத அரசு திட்டமிட்டு இளைஞர்களை திசைமாற்றுகிறது

## — சட்டத்தரணி சுகாஸ் —

(சாவகச்சேரி)

**தமிழர்களுக்கென காணப்பட்ட எட்டு மாவட்டங்களில் ஐந்து மாவட்டங்கள் பறிபோய்விட்டன. தற்போது முல்லைத் தீவும் பறிபோய்க் கொண் டிருக்கின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் மீசாலை தெற்கில் இடம் பெற்ற நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, திருகோணமலை மற்றும் அமபாறை என தமிழர்களுக்கென இருந்த மாவட்டங்கள் எட்டு. அந்த எட்டு மாவட்டங்களில் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்கள் பறிபோய்விட்டன. முல்லைத்தீவும் பறிபோய்க்கொண்டிருக்கின்றது.

எஞ்சியிருப்பது யாழ்ப்பாணமும், கிளிநொச்சியும் தான். அவற்றை நாம் பாதுகாக்க வேண்டும். இளைஞர்களே அந்த வரலாற்றுக் கடமை உங்களிடம் உள்ளது.

இளைஞர்கள் வேலைக்காக கையேந்துபவர்களாக இல்லாமல் வேலைகளை உருவாக்குபவர்களாக இருக்க வேண்டும். இளைஞர்கள் கையேந்துபவர்களாக இல்லாமல் தாம் சார்ந்த சமூகத்தை கைதூக்கி விடுபவர்களாக இருக்க வேண்டும். உங்கள் அடையாளத்தை நீங்கள் தான் பாதுகாக்க வேண்டும். இன்று எமது சமூகம் ஒரு பிற்போக்கு திசையில் சென்று கொண்டிருக்கின்றது.



அன்று இன விடுதலைக்காக கைகளில் கருவிகளைத் தூக்கிய இளைஞர்கள் இன்று வாள்களைத் தூக்கிக் கொண்டு திரிகின்றனர்.

இவ்வாறு எமது இளைஞர் சமுதாயம் தானாக வழிமாறிச் செல்லவில்லை. திட்டமிட்டு சிங்கள பௌத்த பேரினவாத அரசு அவர்களை அந்தத் திசைக்குள் தள்ளிக்கொண்டிருக்கின்றது. என மேலும் தெரிவித்தார். (5-4-30)

# அபயத்தின் 24 மணிநேர சேவை

(யாழ்ப்பாணம்)

அபயம் நிறுவனமானது தற்கொலைக்கு முயற்சிப்பவர்களை தடுக்கும் நோக்கில் "அபயம் இலவச தொலைபேசி அழைப்புச் சேவை எனும் சேவையை ஆரம்பித்துள்ளது.

இச்சேவை மூலம் மன அழுத்தத்தில் உள்ளவர்கள், தவறான முடிவுகளை எடுக்க முற்படுபவர்கள் **071 0712345** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வைத்தியருடன் கலந்தாலோசித்து உரிய தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் இச்சேவையானது 24 மணி நேர சேவையாக நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (5-4)







பொன்னம்பலம் மார்க்கண்டு, மார்க்கண்டு பத்மினிதேவி அவர்களின் 3 ஆவது வருட ஞாபகார்த்தமாக அவரின் புதல்வி தர்ஷினி கஜேந்திரா ரஞ்சித்தின் நிதி அனுசரணையில் 178000 ரூபாய் பெறுமதியான 10 சக்கர நாற்கால்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய அதிகாரி மருத்துவர் வை.திவாகரிடம் கடந்த 18 ஆம் திகதி கையளிக்கப்பட்டன.

# தேர்த்திருவிழா

(குப்பிழான்)

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் 15 தினங்கள் இடம்பெற்று வருகிறது. இதில் இன்று 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை தேர்த் திருவிழாவும், மறுநாள்-28 ஆம் திகதி காலை தீர்த் தோற்சவமும், அன்றைய தினம் இரவு கொடியிறக்க உற் சவமும் இடம் பெறும். கொவிட்-19 சுகாதார அறிவுறுத்தலுக்கு அமைய ஆலயத்திற்கு வருகை தருமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5-4-18)



கரணவாய் செல்வபுரம் இளங்கோ சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நெல்லியடி பொலிஸ் நிலைய சிறுவர் பாதுகாப்பு பிரிவின் பங்குபற்றுதலுடன் மகளிர் தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் அளவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் கலந்து கொண்டார். (படம் : மகாலிங்கம்)



ஈழத்துச் சித்தர் தவத்திரு யோகர் சுவாமிகளின் ஐம்பத்தேழாவது குருபூசை தினமான நேற்று முன்தினம் வியாழக்கிழமை யோகர் சுவாமிகளின் ஐம்பொன்னாலான திருவுருவ விக்கிரகம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் நித்திய வழிபாட்டுக்காகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், ரிஷி தொண்டுநாத சுவாமிகள், அமெரிக்காவின் ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள், கந்தர்மடம் வேதாந்த மடக் குருபீடாதிபதி ஸ்ரீவேத வித்தியாசாகரர் சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்: ரவீசாந்)

# 18 பேருக்கு அபராதம் 19 பேருக்கு பிடியாணை

(கரணவாய்)

நெல்லியடி போக்குவரத்து பொலிஸாரினால் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்தியமை, தலைக்கவசம் அணியாமல் வாகனம் செலுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 37 பேருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இவர்களில் 18 பேர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். 19 பேர் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கவில்லை. சமுகமளிக்காதவர்களுக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதியால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏனைய 18 பேருக்கும் ஐந்து இலட்சத்து 82 ஆயிரம் ரூபாவுக்கு மேல் குற்றப்பணம் செலுத்துமாறும் நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது. (5-4-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பயங்கரமானது



(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள யோசனை மிகவும் பயங்கரமானது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் வைத்து செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிவிவகார அமைச்சர் பொம்மையாக மாறியுள்ள பின்னணியில், எவ்வித தகுதியும் இல்லாத அரசியல் ஆதரவாளர்கள், வெளிவிவகார அமைச்சிலும் இராஜதந்திர சேவையிலும் பொறுப்பான பதவிகளை வகித்து வரும் சூழ்நிலையில், இது ஆச்சரியப்பட வேண்டிய விடயமல்ல.

எனினும் எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் அரசாங்கம் உட்பட அனைவரும் இந்த யோசனையின் பயங்கரத்தை உணர்வார்கள்.

இராஜதந்திர தொடர்புகள் மற்றும் உலக அரசியல் குறித்து எந்த புரிதலும் இல்லாத நபர், வெளிவிவகார அமைச்சின் செயலாளராக பதவி வகித்து வருகிறார். இவரே அமைச்சருக்கு மேலாக இருந்து வெளிவிவகார அமைச்சை நிர்வகித்து வருகிறார்.

தினேஷ் குணவர்த்தன என்பவர் அமைச்சின் செயலாளரின் தேவைக்கு அமைய ஆடும் பொம்மை மாத்திரமே என அவர் மேலும் தெரிவித்தார்.(நி-4)

## அம்பாறை பாடசாலையில் 11 பேருக்குத் தொற்று

(அம்பாறை)

அம்பாறை டி.எஸ்.சேனாநாயக்க தேசிய பாடசாலையின் 11 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதியானவர்களுள் 4 ஆசிரியர்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

**NOTICE**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELERATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

**POST OF RESEARCH ASSISTANT CUM PROJECT ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 01**

**DEVELOPMENT ORIENTED RESEARCH (DOR) PROJECT – FACULTY OF GRADUATE STUDIES**

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above mentioned post under OTS – AHEAD Operation from suitably qualified persons up to 09.04.2021.

The Post carries all inclusive monthly salary of Rs.47,800/= in addition applicable EPF & ETF will be paid.

Applicants are requested to visit Jaffna University Website www.jfn.ac.lk for further details.

Registrar.

(C-1823)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 13 செவ் 11 சூரி 2 இல் உயரம்: **178cm**<br>தகைமை/தொழில்: **Civil Engineer, Work- Construction Company**<br>எதிர்பார்ப்பு: அரச வேலை உடன் பெண், வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்<br>தொ.இ: **B/11663** | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 64 செவ் 10 சூரி 8 இல் உயரம்: 4'4"<br>தகைமை/தொழில்: **EX.B.CO**<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். வெளிநாடும் விரும்பத்தக்கது<br>தொ.இ: **G/11740** |
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: செவ்,சூரி 10 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: **A/L**, நகை வேலை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு மட்டும்<br>தொ.இ: **B/11664** | பிறப்பு: 1976 இந்து நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 35 1/4 செவ், சூரி 9இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: **A/L**<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: **G/11743** |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 13 செவ் 11 சூரி 1 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: **B.ED,B.A,Work-Development Officer,Hard Ball Cricket Coach**<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்க்கும் பெண், வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்<br>தொ.இ: **B/11666** | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 15 1/2 செவ், சூரி 3 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: **B.B.A, Work-A.D.O**<br>எதிர்பார்ப்பு: அரச வேலை<br>தொ.இ: **G/11753** |
| பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: மகம்<br>கி.பா: செவ் 12 சூரி 10 இல் உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: **A/L**, பிரான்ஸ் **PR** உண்டு<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு பிரான்ஸ் வரக்கூடியர், பிரான்ஸ்/கனடா<br>தொ.இ: **B/11667** | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: செவ் 2 சூரி 12 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: **O/L**<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த மாப்பிள்ளை, வெளிநாடும் விரும்பத்தக்கது<br>தொ.இ: **G/11754** |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்**
**வருடாந்த பொதுக்கூட்டம் 2021**

FWC

28.03.2021 இல் நடைபெறவிருந்த மேற்படி பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்படுகிறது என்பதை அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன். புதிய திகதி பின்னர் அறியத்தரப்படும்.

**வெளிக்கள நிலைய அலுவலகம்,**
**133, செம்மணி வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
**ஆ.கதிர்காமநாதன்**
**செயலாளர்.**

(6349)

வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்



## ஆன்மிக உலக சாதனை தவம் - 2021

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

அன்பர்களே!

"வேதாத்திரி மகரிஷி அவர்களது 15 ஆவது வேதாத்திரிய வேள்வி தினத்தை முன்னிட்டு ஒரே நாளில் ஒரே நேரத்தில் உலகம் முழுவதும் நேரலையில் இணைந்து ஆன்மிக உலக சாதனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்வேளையில் தாங்களும் குடும்பம், உற்றார், உறவினர், நண்பர்களுடன் ஒன்றிணைந்து இப்பணியில் இணைய **Youtube** என்ற வலையமைப்பினூடாக அணிதிரண்டு வாரீர்"

காலம்: 28.03.2021 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை 6.00 மணி
வலையமைப்பு: **https://youtube.com/skyyogaty**

தொடர்புகளிற்கு : யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81 பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல.: 021 222 2772

(C-1817)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்ணய விலையின்மையால் பாதிக்கப்படும் விவசாயிகள்

(மன்னார்)

**தனியார் நெல் கொள்வனவு சந்தையில் நெல்லுக்கான நிர்ணய விலை இதுவரை நிர்ணயிக்கப்படாமையினாலும் அரசாங்கம் காய்ந்த நெல்லினை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்வதனாலும் தொடர்ச்சியாக தாங்கள் பாதிக்கப்படுவதாக மன்னார் மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

நெல் நிரம்பல் சந்தையில் அதிகம் செல்வாக்கு செலுத்தும் மாவட்டங்களில் மன்னார் மாவட்டத்தின் பங்களிப்பு அதிகமாக காணப்பட்டாலும் மாவட்ட விவசாயிகளின் நெல் உற்பத்திக்கான விலை நிர்ணயத்தை அரசாங்கம் இதுவரை உறுதிப்படுத்தாமையினால் தனியார் சந்தையின் நிரந்தரமற்ற விலைக்கு நெல்லை விற்பனை செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாகவும் பல்வேறு கால நிலை பிரச்சினைகள், கால்நடை பிரச்சினைகள், நீர் தட்டுப்பாடுகளை கடந்து முழுமைப்படுத்தப்படும் நெற் செய்கையை திருப்தியான விலைக்கு விற்பனை செய்ய முடியாதுள்ளதாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது ஒரு புறம் இருக்க அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்படுகின்ற நெல் காய்ந்த நிலையிலேயே கொள்வனவு செய்யப்படுவதனால் நெல்லை காய வைப்பதற்கு ஒழுங்கான இடம் இன்மையால் வீதிகளிலேயே காயவைப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

பல வருடங்கள் நிர்ணய விலைக்கான கோரிக்கைகள் தங்களால் முன்வைக்கப்படுகின்ற போதிலும் நெல்லை காய வைப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக கோரப்படுகின்ற போதும் இதுவரை அவற்றுக்கான நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே இவ்வாறான நிலை தொடர அனுமதிக்காது நெல்லுக்கான நிர்ணய விலையை விவசாயிகளுடன் அரச அதிகாரிகள் கலந்துரையாடி மேற்கொள்ள வேண்டும் எனவும் அதேநேரம் வலய ரீதியாக நெல் காய வைப்பதற்கான இடங்களையும் களஞ்சியப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் அதிகாரிகளும் மேற்கொண்டு தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-285)

## ஆக்கிரமிப்பு இடம்பெறக் காரணம் நகரசபையின் அசமந்தப் போக்கே

(குருமன்காடு)

வவுனியா குளத்தில் தொடர் ஆக்கிரமிப்பு இடம்பெற நகரசபையின் அசமந்த போக்கே காரணம். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மக்கள் நலன்சார்ந்து தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்தார்.

வவுனியா குளத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மாவட்ட செயலகம் முன் நேற்று இடம்பெற்ற சத்தியாகிரகப் போராட்டதளத்திற்கு வருகை தந்து அவர்களது கோரிக்கைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா குளத்தில் தொடர் ஆக்கிரமிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது சம்பந்தமாக இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சத்தியாகிரகப் போராட்டத்தில் நானும் பங்கேற்க வேண்டிய ஒருவன். ஆரம்பம் முதல் குள ஆக்கிரமிப்புக்கு எதிர்பானவர்களில் நானும் ஒருவன். ஆனால் வவுனியா நகரசபையின் அசமந்தப் போக்கினால் இவ்விடயம் இடம்பெற்றுள்ளது.

உத்தரவுகளை மீறி குளத்துக்குள் கட்டுமானப் பணிகள் இடம்பெற்றுள்ளன. வருகின்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மக்கள் நலன் சார்ந்து இதற்கு உறுதியான முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (5-4-250)

## போக்குவரத்து பொலிஸாரினால் விசேட வாகன கண்காணிப்பு



(மன்னார்)

நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் வாகன விபத்துக்களை குறைப்பதற்காகவும் வாகனங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாகவும் போக்குவரத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட கண்காணிப்பு நடவடிக்கையானது மன்னார் மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பொறுப்பதிகாரி மாறசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

மன்னார் பிரதான பாலப்பகுதியில் பயணிக்கும் வாகனங்கள் மேற்படி கண்காணிப்பு நடவடிக்கையின் போது முழுமையாக பரிசோதிக்கப்பட்டதுடன் வாகனங்களில் காணப்படும் குறைபாடுகளும் பொலிஸாரினால் அடையாளப்படுத்தப்பட்டது. அதேநேரத்தில் வாகனங்களில் தேவைக்கு அதிகமாக பொருத்தப்பட்ட அலங்காரங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை அகற்றுமாறு வாகன உரிமையாளர்களுக்கு பணிக்கப்பட்டதுடன் பொலிஸார் மற்றும் மோட்டார் வாகன பரீட்சாத்தகரினால் அடையாளப்படுத்தப்பட்ட குறைபாடுகளை 10 நாட்களுக்குள் நிவர்த்தி செய்து ஆவணங்களை உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறும் பணிக்கப்பட்டது. மேற்படி போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது அடையாளப்படுத்தப்பட்ட குறைபாடுகளை குறித்த காலப்பகுதியினுள் வாகன உரிமையாளர் நிவர்த்தி செய்யாத பட்சத்தில் குறித்த நபர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)

## குளத்தின் எல்லைப்பரப்பிற்குள் மட்டும் நீர் விநியோகிக்கவும் - விவசாயிகள்

(அக்கராயன்)

கிளிநொச்சி குடமுருட்டிக் குளத்தின் எல்லைகளைத் தாண்டி காடுகளை அழித்து நிலங்களுக்கு குளத்தில் இருந்து நீர் வழங்குங்கள் என்பது ஏற்றுக் கொள்ள முடியாது என குடமுருட்டி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தினை நடத்துவதற்கு சென்ற அதிகாரிகளிடம் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளத்தின் நீர் தற்போது வாய்க்கால்கள் அமைத்து நீர்ப்பாசனம் செய்யப்படுகின்ற நிலப்பரப்பிற்கே பற்றாக்குறை இருக்கின்ற போது குளத்தில் இருந்து நீண்ட தூரங்களில் காடுகளை அழித்து சீர் செய்த நிலங்களுக்கு குளத்தில் இருந்து தான் நீர் வழங்குங்கள் என்பது நியாயமற்றது.

குளம் என்பது சகல நிலங்களுக்கும் நீர் வழங்கக் கூடியதல்ல.

திட்டமிடப்பட்டு வாய்க்கால்கள் உருவாக்கப்பட்டு நீர் விநியோகிக்கப்படுவது இது தொடர்பாக இறுக்கமான முடிவுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

குடமுருட்டிக் குளத்தின் கீழான காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்படாத பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன.

கடந்த ஆண்டு நடைபெற்ற சிறுபோகக் கூட்டத்தில் தலைமை தாங்கிய மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) குடமுருட்டிக் குளத்திற்கான காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது எனவும் தெரிவித்தனர். (5-4-350)



## மேய்ச்சல் தரவைகள் இன்மை; கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெயரூபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாந்தை கிழக்கில் உள்ள வவுனிக்குளம் உட்பட பல குளங்களில் இருபோக நெற்செய்கை மேற்கொள்வது வழக்கம்.

5 ஆயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் மாந்தை கிழக்கில் உள்ளன. இக்கால்நடைகளை பயிர்ச் செய்கைக் காலங்களில் மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் தொடர்ச்சியாக கால்நடை வளர்ப்பாளர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறுகின்ற கூட்டங்களில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை இனங்காட்டுமாறு கோரிய போதும் தீர்வு எட்டப்படவில்லை.

கால்நடை வளர்ப்பாளர்களும் பயிர்ச்செய்கையாளர்களும் இரு தொழில்களையும் மேற்கொள்கின்ற போதிலும் மேய்ச்சல் தரவையின்மை காரணமாக அவர்களிடையே அடிக்கடி முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

மாந்தை கிழக்கிற்கான மேய்ச்சல் தரவைக்கான நிலங்களை மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் இனங்கண்டு கால்நடை வளர்ப்பாளர்களுக்கு அதனை அடையாளம் காட்ட வேண்டும். அதன்போதுதான் இரு தரப்பினரும் சுமுகமாக தமது தொழில்களை முன்னெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். (5-4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

27.03.2021
பங்குனி 14, சனிக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 3.08 மணிவரை
பூரம் முன்னிரவு 7.06 மணிவரை
சுபநேரம் 3.14-4.44 மணிவரை
இராகுகாலம் 9.14-10.44 மணிவரை
சந்திராஷ்டமம்:- திருவோணம், அவிட்டம் வளவன்

**மேஷம்** – சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** – தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், தனவரவில் தடைகள் அகலும், வாகன சுகமுண்டு, பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள்.

**மிதுனம்** – நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** – சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்** – குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், கற்பனை மிகுதியான நாள், திடீர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** – தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள்.

**துலாம்** – திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**விருச்சிகம்** – இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**தனுசு** – தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளைச் சந்திக்கும் எண்ணம் உருவாகும், வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மகரம்** – உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது, வழிபாட்டால் திரு-ப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்** – குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொழில் வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம்.

**மீனம்** – நினைத்த காரியங்களை எளிதில் நிறைவேற்றுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

ஒரு தவறுக்கு அடிபணிந்தால் மற்றொன்றைக் கூட்டி வரும்.

## ஐ.நா.தீர்மானம்

# இந்தியா நடுநிலை வகித்தாலும்

## இலங்கைக்கு கனதியான செய்தியை புகட்டியுள்ளது

### பாராளுமன்றில் சிறிதரன்



(கொழும்பு)

இராணுவமும் அரசும் தமிழ் மக்கள் மீது கொலைகளையும் குற்றங்களையும் புரியவில்லை என்றால், அநீதிகளை இழைக்கவில்லை என்றால் ஏன் பயப்பட வேண்டும்? விசாரணைக்கு முகம் கொடுக்கலாம் தானே?"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

"உங்கள் மடியில் கனதி இருப்பதனால்தான் இதற்கு எதிராக நீங்கள் குரல் கொடுக்கின்றீர்கள். நீங்கள் போர்க்குற்றம் செய்யவில்லை என்றால் ஒரு பகிரங்க விசாரணைக்குத் தயாராகுங்கள்"

"இலங்கையில் இடம் பெற்ற இன அழிப்பு உண்மைகளை தேசிய ரீதியில் கண்டறிய முடியாது. எனவே, இவ்விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டும்" எனவும் சிறிதரன் எம்.பி. தெரிவித்தார்.

"ஐ.நா. தீர்மானம் தொடர்பில் இந்தியா நடுநிலைமை வகித்திருந்தாலும் இந்தியா இம்முறை கனதியான செய்தியை இலங்கைக்கு சொல்லியுள்ளது" எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் கிராம மட்ட சந்திப்புக்கள் கூட இது வரை வடக்கிலோ அல்லது கிழக்கிலோ நடந்ததில்லை. இந்த நாடு ஒரு இனவாத சகதிக்குள் மூழ்கிப் போயுள்ளது. அமைச்சர்கள் இனவாதத்தை கக்குகின்றார்கள். இந்த நாடு இனவாதத்தால் அழியப் போகின்றது.

சர்வதேசத்தின் பிடிக்குள் இந்த நாட்டைக் கொண்டு செல்ல நீங்கள் தயாராகி விட்டீர்கள் என சிறிதரன் தெரிவித்தார். (நி-4)

# மாகாணசபை முறைமையை இரத்துச் செய்ய முடியாது

## தேர்தல் நிச்சயம் நடத்தப்படும்

### வாசுதேவ உறுதி

(கொழும்பு)

அரசியலமைப்பினூடாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை ஒரு சிலரது தனிப்பட்ட நோக்கங்களுக்காக இரத்துச் செய்ய முடியாது.

எனவே மாகாண சபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். மாகாணசபை முறைமை அரச நிர்வாகத்திற்கு முக்கியமானது என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கந்தானை பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபை முறைமையை முழுமையாக இரத்து செய்து உள்ளூராட்சி மன்ற முறைமையை பலப்படுத்து [illegible] தரப்பினர் சில உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இவை அவர்களின் தனிப்பட்ட கருத்தாகும்.

இவ்வாறான தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்காக அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக கொண்டு வரப்பட்ட மாகாணசபை முறைமையை ஒருபோதும் நீக்க முடியாது. அதற்கான அவசியமும் அரசாங்கத்துக்கு கிடையாது.

ஜூலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. தேர்தல் முறைமையில் சட்ட சிக்கல் காணப்படுகிறது. பழைய முறைமையின் அடிப்படையில் தேர்தலை 3 மாத காலத்துக்குள் நடத்த முடியும். ஆனால் இதற்கு பாராளுமன்றில் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவு அவசியமாகும்.

தேர்தல் முறைமையில் காணப்படும் சிக்கல் நிலைக்கு தீர்வு காண்பதற்கு பாராளுமன்றின் ஊடாக உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கம் தேர்தலை உரிய காலத்தில் நடத்தியிருந்தால் இன்று அது தொடர்பில் மாறுபட்ட விமர்சனங்கள் தோற்றம் பெற்றிருக்காது என வாசுதேவ தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## கிணற்றுக்குள் வைர மோதிரம்



பிறகு, வைரக்கல்லைக் குறிபார்த்து ஏற்கனவே கிணற்றின் உள்ளேயிருந்த சாணத்தின் மீது வீசியெறிந்தார். கல் சரியாக சாணத்தின் மீது விழுந்தது.

தன்னுடைய வேலைக்குத் தானே ஒரு சபாஷ் போட்டுக் கொண்டு, அங்கிருந்த காவலர்களை அதைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு பீர்பால் வீடு திரும்பினார்.

வீடு திரும்பியபின் உணவருந்தி விட்டு நிம்மதியாகத் தூங்கினார். பிறகு மாலையில் எழுந்து கிணற்றை நோக்கிச் சென்றார்.

காலையில் அவர் வீசியெறிந்த சாணம் வெயிலில் நன்றாகக் காய்ந்து உலர்ந்திருந்தது. அதன் மீது அவர் வீசிய கல்லும் சாணத்துடன் நன்றாக ஒட்டிக் கொண்டிருந்தது. பிறகு பீர்பால் மிகவும் நிதானமாகவும், ஜாக்கிரதையாகவும் நூலைப் பிடித்து மேலே இழுக்க, கல் கிணற்றுக்குள்ளிருந்து மேலே வந்துவிட்டது.


கல்லில் ஒட்டிய சாணமும் உலர்ந்து போய் அதனுடன் சேர்ந்து பத்திரமாக இருந்தது. அதிலிருந்து மோதிரத்தை எடுத்து, சுத்தமாகக் கழுவியபின், பீர்பால் அரண்மனை தர்பாருக்குச் சென்றார்.

அந்த நேரத்தில் அக்பர் தர்பாரில் தன் அதிகாரிகளுடன் அமர்ந்திருந்தார். அவரை வணங்கிய பீர்பால், “பிரபு! நான் வெற்றிகரமாகத் தங்கள் மோதிரத்துடன் வந்திருக்கிறேன்” என்றதும் அக்பருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

“கிணற்றுள் இறங்காமலேயே மோதிரத்தை எடுக்க உன்னால் எப்படி முடிந்தது?” என்று அக்பர் ஆவலுடன் கேட்க, “மூளையைப் பயன் படுத்தினால் முடியாதது ஒன்றுமில்லை என்று நீங்கள் சொன்னதை நிரூபித்து விட்டேன்” என்று கூறிய பீர்பால், தான் மோதிரத்தை மீட்டதை விளக்கிக் கூறினார். “பலே! சபாஷ்! உன்னைப் போல் புத்திசாலியை நான் பார்த்ததே இல்லை!” என்று பாராட்டிய அக்பர் பொற்காசுகள் நிரம்பிய பையை பீர்பாலுக்குப் பரிசளித்தார்.

(முற்றும்)

# மகாபாரதம்




**சிசுபாலன்**

சக்கரவர்த்தியாகி விட்ட யுதிஷ்டிரர் தலைமையை எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஏற்றனர்.

தம்பியர் நால்வரும் நான்கு திக்குகளிலும் சென்று மன்னர்களின் நட்பைப் பெற்றனர்.

மாமுனிவர்களும் பீஷ்மரும் துரோணரும், கௌரவரும் இந்திரப்பிரஸ்தம் வந்தனர். கண்ணபிரானிடம் வெறுப்பு கொண்டிருந்த சிசுபாலனும் வந்திருந்தான். இந்திரப்பிரஸ்தம் ஒரு சொர்க்கலோகம் போல திகழ்ந்தது.

நாரதர் சொன்னாற் போல ராஜசூய யாகம் இனிதே நடந்தது. துரியோதனன் மனதில் பொறாமைத்தீ வளர்ந்தது.

வந்தவர்களுக்கு மரியாதை செய்யும் நிகழ்ச்சி ஆரம்பித்தது. யாருக்கு முதல் மரியாதை செய்வது என்ற கேள்வி எழுந்தது. பீஷ்மர் மற்றும் சான்றோர்கள் கூடி ஆலோசித்து கண்ணனுக்கு முதல் மரியாதை என்று தீர்மானிக்க அதன்படி சகாதேவன் கண்ணனுக்கு பாத பூஜை செய்தான்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சிசுபாலன் தன் அதிருப்தியைக் காட்டி, கண்ணனைப் பலவாறு இகழ்ந்தான்.

ஆத்திரத்தில் பீஷ்மரையும், யுதிஷ்டிரரையும் புண்படுத்தினான். ஆடு, மாடுகளை மேய்க்கும் யாதவர் குலத்தைச் சேர்ந்தவன் என்றும் இடையன் என்றும் கண்ணனை ஏசினான்.

கங்கை மைந்தன் பீஷ்மரை அவதூறாகப்பேசினான். (கங்கையில் பலரும் நீராடுவதால் கங்கையை பொது மகள் என்று ஏசினான்).

குந்தியின் மந்திர சக்தியால் யமதர்மனை நினைத்து பெற்ற மகன் யுதிஷ்டிரர் என்பதால் அவரும் சிசுபாலனின் தாக்குதலுக்கு ஆளானார்.

சிசுபாலனின் அவமானங்களை பொறுத்துக் கொண்டிருந்த கண்ணன் ஒரு கட்டத்தில் அவனைக் கொல்லும் காலம் நெருங்கி வருவதை உணர்ந்து அவன் மீது சக்கராயுதத்தைச் செலுத்தினார்.

அது சிசுபாலனின் தலையை உடலிலிருந்து அறுத்து வீழ்த்தியது. அவன் மேனியிலிருந்து ஒரு ஒளி புறப்பட்டு கண்ணனின் பாதங்களில் வந்து சேர்ந்தது. சிசுபாலன் சாப விமோசனம் பெற்றான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தொற்று நீக்கி அருந்திய மூவர் பலி

(டில்லி)

உடன் பிறந்த மூன்று சகோதரர்கள் போதைக்காக கிருமித் தொற்று நீக்கியை அருந்தி உயிரிழந்த சம்பவம் இந்தியாவின் மத்திய பிரதேசம் பகுதியில் பதிவாகியுள்ளது.

இந்த மூன்று பேரும் மொத்தமாக 5 லீற்றர் கிருமித் தொற்று நீக்கியை அருந்தியுள்ளதாகப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். மயக்கமடைந்த இவர்கள் வைத்தியசாலையில் அனுமதித்தபோது மூவரும் உயிரிழந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4-8)

# கொரோனா மருத்துவமனையில் தீ; 10 நோயாளர்கள் உடல் கருகிப்பலி



(டில்லி)

மும்பையில் கொரோனா தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துவந்த தனியார் மருத்துவமனை ஒன்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 10 பேர் பலியாகியுள்ளனர்.

வணிக வளாகம் ஒன்றின் மூன்றாவது மாடியில் இந்த தனியார் கொவிட்-19 சிகிச்சை மையம் அமைந்திருந்தது. சுமார் 76 கொரோனா தொற்று நோயாளிகள் சிகிச்சைபெற்று வந்தனர். இந்நிலையில் ஏனைய கொரோனா தொற்று நோயாளிகள் அனைவரும் மீட்கப்பட்டு வேறு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை 12.30 மணியளவில் தீவிபத்து ஏற்பட்டதை அடுத்து 22 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து போராடித்தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-4-8)

# 15 மாதங்களுக்கு பிறகு சுற்றுப்பயணம்




(டில்லி)

இந்தியப் பிரதமர் மோடி நேற்று வெள்ளிக்கிழமை காலை அவர் வங்கதேசத்துக்கு புறபட்டுச் சென்றார்.

15 மாதங்களுக்கு பிறகு முதன்முறையாக வங்கதேசத்துக்குப் பிரதமர் மோடி சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். (நி-4-8)

# இராணுவத்தின் அதிரடித் தாக்குதல்; 27 பயங்கரவாதிகள் கொன்று குவிப்பு



(காபூல்)

கட்டார் நாட்டின் டோஹா நகரில் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி வந்தாலும் ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் இன்னும் அச்சுறுத்தலாகவே விளங்குகிறார்கள்.

இராணுவம் மீதும் பொலிஸார் மீதும் அவ்வப்போது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை நடத்தி பெருத்த உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துகிறார்கள்.


இந்த நிலையில் அங்கு தெற்கு ஜாபுல் மாகாணத்தில் மிஷான் மற்றும் ஷின்காய் மாவட்டங்களில் தலிபான் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக இராணுவத்துக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்தன.

அந்தத் தகவல்களின் பேரில் அந்த நாட்டின் இராணுவம் கடந்த புதன்கிழமை இரவு அதிரடியாகத் தாக்குதல்களை நடத்தியது.

இந்தத் தாக்குதல்களில் 27 தலிபான் பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டதாகவும் 18 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் இராணுவ வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

இதுமட்டுமின்றி தலிபான் பயங்கரவாதிகளின் சுரங்கப் பாதையும் வெடிமருந்துகளும் அழிக்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. (நி-4-8)

# திருப்பதிக்கு போட்டியாக லட்சுமி நரசிம்மரின் குடைவரை கோயில்




(டில்லி)

ஆயிரம்ஆண்டுகள்பழைமை வாய்ந்த கோயில் ஒன்று மிகவும் பிரமாண்டமான முறையில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

தெலுங்கானா மாநிலத்தின் யதாத்ரி புவனகிரி மாவட்டத்தில் லட்சுமி நரசிம்மரின் குடைவரை கோயில் அமைந்துள்ளது. குன்றின் மேல் அமைந்துள்ள இந்தக் கோயில் சுமார் 1,000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. 14.5 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ள இந்தக் கோயிலில் 7 கோபுரங்கள் அமைந்துள்ளன.

குறிப்பாக திருப்பதி கோயில் போன்று பிரமாண்டமான முறையில் லட்சுமி நரசிம்மரின் குடைவரை கோயிலைப் புனரமைக்க மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான அரசு சார்பில் ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

# உலகிற்கு வெளியே முதன் முறையாக ஹெலி பறக்க விடும் நாசா



(வோஷிங்டன்)

செவ்வாய் கிரகத்தில் இன்ஜெனூட்டி ஹெலிகொப்டர் ஏப்ரல் 8 ஆம் திகதிக்குள் பறக்க விடப்படும் என்று நாசாவின் அறிவியல் இயக்குநர் பாபி பிரவுன் தெரிவித்தார்.

பெர்சவரன்ஸ் ரோவர் விண்கலத்துடன் மிகச்சிறிய ரக ஹெலிகொப்டரும் செவ்வாய்க் கிரகத்தில் தரை இறக்கப்பட்டுள்ளது.

இன்ஜெனூட்டி என்று பெயரிடப்பட்டுள்ள இந்த அதிநவீன சிறிய ஹெலிகொப்டர் செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பு ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இந்த நிலையில் செவ்வாய்க் கிரகத்தில் இன்ஜெனூட்டி ஹெலிகொப்டர் விரைவில் அதாவது ஏப்ரல் 8 ஆம் திகதிக்குள் பறக்க விடப்படும் என்று நாசாவின் அறிவியல் இயக்குநர் பாபி பிரவுன் தெரிவித்தார். அதன் மூலம் உலகத்துக்கு வெளியே முதல் முறையாக வேறு கிரகத்தில் ஹெலிகொப்டரை நாசா இயக்க உள்ளது. (நி-4-8)

# தம்பதிகளுக்கு சம்பளத்துடன் விடுமுறை

(வெலிங்டன்)


கருச்சிதைவு ஏற்பட்டால் பெண்களுக்கு சம்பளத்துடன் விடுமுறை அளிக்கும் சட்டத்துக்கு நியூசிலாந்து அரசு ஒப்புதல் அளித்துள்ளது

கருச்சிதைவு அல்லது இறந்த குழந்தைப் பிறப்பு ஆகியவற்றால் பாதிக்கப்படும் வேலை செய்யும் தாய்மார்களுக்கும் அவர்களின் துணைவருக்கும் சம்பளத்துடன் விடுமுறை அளிக்கும் சட்டம் நியூசிலாந்து நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உலகிலேயே முதன்முறையாக இதுபோன்ற ஒரு சட்டம் பெண்களின் நலன் சார்ந்து இயற்றப்பட்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

. கருச்சிதைவு ஒரு நோய் அல்ல. அது ஓர் இழப்பு என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜினனி ஆண்டர்சன் தெரிவித்தார். (நி-4-8)

# பிரிட்டன் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியது ரஷ்யா



(மொஸ்கோ)

650 செயற்கைக் கோள்கள் வாயிலாக அடுத்த ஆண்டுக்குள் உல்களாவிய வணிக இணையச் சேவையைத் தொடங்க ஒன்வெப் திட்டமிட்டுள்ளது.

ரஷ்யாவின் விண்வெளி ஆய்வு மையம் நேற்று முன்தினம் சோயுஸ் விண்கலம் மூலம் பிரிட்டனைச் சேர்ந்த ஒன்வெப் நிறுவனத்தின் 36 தொலைத்தொடர்பு மற்றும் இணையத்தள செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியது. வெற்றிகரமாகப் புறப்பட்டுச் சென்ற ரொக்கெட் புவி சுற்றுவட்டப் பாதையை அடைந்ததும் செயற்கைக் கோள்கள் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டு அவற்றுக்கான பாதையில் நிலை நிறுத்தப்பட்டன.

மொத்தம் 650 செயற்கைக் கோள்கள் வாயிலாக அடுத்த ஆண்டுக்குள் உலகளாவிய வணிக இணையச் சேவையைத் தொடங்க ஒன்வெப் திட்டமிட்டுள்ளது. இதற்காகப் பல் வேறு நாடுகளின் விண்வெளி ஆய்வு மையங்கள் மூலமாகச் செயற்கைக் கோள்களை அனுப்பி வருவது குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் ஏற்றிச் சென்ற பாரவூர்தி குடைசாய்ந்து விபத்திற்குள்ளானது

## எரிபொருளை சேகரிக்க வரிசையில் நின்ற மக்கள்



(திருமலை)

திருகோணமலை-ஹபரண வீதியில் எரிபொருள் ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று குடை சாய்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை -ஹபரண வீதியில், ஹபரண- ஹதரஸ்கொட்டுவ பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை பெற்றோல் ஏற்றிச் சென்ற பாரவூர்தி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பாரவூர்தியில் 19 ஆயிரத்து 800 லீற்றர் பெற்றோல் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், பாரவூர்தி குடைச்சாய்ந்ததால் அதில் ஏற்றிச் செல்லப்பட்ட எரிபொருள் கசியத் தொடங்கியது.

இந்நிலையில் குறித்த எரிபொருள் தாங்கியில் இருந்து கசிந்த பெற்றோலை எடுப்பதற்கு வரிசையில் மக்கள் நின்றமை அவதானிக்க முடிந்தது. (நி-4)

# பசறை விபத்தில் பெற்றோரை இழந்த மூன்று குழந்தைகள்

## தத்தெடுக்க விரும்பும் மருத்துவர்

(பதுளை)

பசறை விபத்தில் தாய்,தந்தையை இழந்து அநாதையகளான மூன்று குழந்தைகளுக்கும் உதவுவதற்கு வைத்தியர் ஒருவர் முன்வந்துள்ளார்.

பதுளை-பசறையில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற பேருந்து விபத்தில் 15 பேர் உயிரிழந்திருந்தனர்.

இதில் மூன்று குழந்தைகள் தமது தாய்,தந்தையை இழந்து லுனுகலையில் பாட்டியுடன் வாழ்கின்றமை அனைத்து ஊடகங்களினதும் கவனத்தை ஈர்த்திருந்தது.

இதையடுத்து குறித்த குழந்தைகளுக்கு உதவ அம்பாறை பிராந்திய தொற்றுநோயியல் நிபுணர் முன்வந்துள்ளார்.

மூன்று குழந்தைகளையும் கவனித்துக்கொள்ள விரும்புகின்றேன் என்று கூறி அவர்களை தத்தெடுக்க் பசறை பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதன்படி மருத்துவரின் கோரிக்கை குறித்து பசறை பொலிஸார் நீதிமன்றத்திற்கு தகவல் அளித்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

# இந்தியா தமிழ் மக்களுக்கு துரோகம் செய்துவிட்டது

## கமல்ஹாசன் டுவிட்

(சென்னை)

ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையில் இந்தியா மேற்கொண்டிருந்த நிலைப்பாட்டை மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் கண்டித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் இது தொடர்பில் பதிவிட்டுள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின், 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணை, 11 மேலதிக வாக்குகளால் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.

47 உறுப்பு நாடுகளைக் கொண்ட, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும் வாக்களித்தன. இதன்போது இந்தியா உள்ளிட்ட 14 நாடுகள் வாக்கெடுப்பிலிருந்து விலகியிருந்தன.

இந்த நிலையில் இந்தியா வாக்கெடுப்பில் இருந்து விலகியமை தமிழ் மக்களுக்கு செய்த துரோக செயல் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தியாவின் இந்த நிலைப்பாடு தொர்டர்பாக தமிழகத்திலுள்ள ஏனைய கட்சிகளின் தலைவர்களும் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஜோன்ஸ்டன் பெர்னான்டோ சதொச வழக்கிலிருந்து விடுவிப்பு




(கொழும்பு)

அரசியல் நடவடிக்கைகளுக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தின் காலத்தில் சதொச ஊழியர்களை தவறாகப் பயன்படுத்தியது தொடர்பான வழக்கிலிருந்து அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவர் விடுவிக்கப்பட்டுள்ளனர். (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2265

### தருண்



நம்மக்கிட்ட எப்பவும் நிரந்தரமா இருக்கப் போறது புன்னகை மட்டும் தான் அத மட்டும் எப்பவும் யாருக்காகவும் இழந்துடாதீங்க.

### பலூ

உலகத்திலேயே ரொம்ப அழகானவங்க யார் தெரியுமா..




அடுத்தவங்க சந்தோசத்தை பார்த்து வயிறு எரியாம தானும் சந்தோசப்படுறவங்க தான்..

### தீனா

சொத்து எக்கச்சக்கமா இருந்து என்ன பிரயோசனம் டாக்டர்?

கிட்னில கல்லு இருக்கே



ஒண்ணும் கவலைப்படாதீங்க இரண்டையும் கரைச்சிடுவோம்...

### துவா

கோபப்பட்டு
வென்று விட்டாய் என்றால்
உன் கோபம்
பெரிது என்று அர்த்தமல்ல.

அதைத்
தாங்கிக் கொண்டவர்களின்
பொறுமை பெரிது
என்று அர்த்தம்!

### பிரபா



அக்கா என்பவள்..
தனக்கு பின் பிறக்கும் ஒவ்வொரு தம்பி தங்கைக்கும் இன்னொரு அம்மாவாகிறாள்..!

### சுரேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களமிறக்கப்படும் புலனாய்வாளர்கள்; அடுத்தகட்ட நகர்வு ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு 2.8 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது.

இந்த நிலையில் ஐ.நா. பொதுச் சபையின் 76 ஆவது அமர்வில் கூடுதல் நிதியைக் கோருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை ஆய்வு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த தீர்மானத்தில் இலங்கையின் நிலைமை குறித்து அறிக்கை அளிக்க மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம், ஐ.நா. 76 ஆவது பொதுச் சபையில் வரவு-செலவுத் திட்ட ஆதரவை கோரியுள்ளது.

விசாரணை மற்றும் சான்றுகள் சேகரிக்கும் பொறிமுறைக்கு இலங்கையில் 12 புலனாய்வாளர்களை நியமிக்க மனித உரிமைகள் பேரவை தீர்மானித்துள்ளது.

நிரல் வரவு-செலவுத் திட்டத்திற்கான ஒப்புதலைக் கோருவதில், உண்மை கண்டுபிடிப்புகள், தகவல் சேகரிப்பு மற்றும் விழிப்புணர்வு அதிகரிப்பதற்காக ஊழியர்களுக்காக நான்கு பயணங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையால் மேற்கொள்ள முன்மொழியப்பட்ட விடயங்களில் செயற்கைக்கோள் படங்களை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஒரு தகவல் ஆதார களஞ்சியத்தை நிறுவுதல் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# தீவிரவாத பிரசாரம், நிதி சேகரிப்பு சஹ்ரானின் கூட்டாளி உட்பட

## இருவர் கைது – அஜித் ரோஹண

(கொழும்பு)

நாட்டில் தீவிரவாத சித்தாந்தங்களை பரப்புதல் மற்றும் தீவிர பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான நிதி சேகரிப்பு தொடர்பான சந்தேகத்தின் அடிப்படையில் இருவரை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மாத்தளை பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

இவர் கடந்த டிசெம்பர் 5 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார். இவர் இலங்கையில் தீவிரவாத பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நிதி திரட்டுவதிலும் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை சமூக ஊடகங்களில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நியாயப்படுத்தியதற்காக 49 வயதான ஒருவர் மட்டக்களப்பு காத்தான்குடியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முக்கிய குற்றவாளியான சஹ்ரானின் நெருங்கிய நண்பராகவும் அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். (நி-4)

# போலியான கொள்ளைச் சம்பவத்தை அரங்கேற்றிய அதிகாரி சிக்கினார்

(கொழும்பு)

சுமார் 23 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக ஹெயியன்துடுவ பொலிஸ் நிலையத்துக்கு தனியார் நிறுவனம் ஒன்றின் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டை விசாரித்தபோது அச்சம்பவம் குறித்த முறைப்பாட்டாளரினாலேயே அரங்கேற்றப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டை அளித்த நிறைவேற்று அதிகாரி, தான் பணியாற்றும் நிறுவனத்துக்கு உரித்தான பணத்தை தனது தனிப்பட்ட தேவைகளுக்காக செலவிட்டதை மூடி மறைப்பதற்காக இவ்வாறு போலியான கொள்ளை சம்பவமொன்றை சித்திரித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தான் இந்த பணத்தை வங்கியில் வைப்பிலிட எடுத்துச் சென்ற வேளையில் உந்துருளியொன்றில் வந்த இருவர் அப்பணத்தை அபகரித்துச் சென்றுள்ளதாக சந்தேக நபரான நிறைவேற்று அதிகாரி பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்நிலையில், மேற்படி முறைப்பாட்டாளரும் அவரது மனைவியின் சகோதரனும் இணைந்து இந்த போலிக் கொள்ளை சம்பவத்தை திட்டமிட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த கொள்ளைச் சம்பவத்தில் பணத்தைக் கொள்ளையிடுவது போன்று நடிப்பதற்காக இரு நபர்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் சம்பவம் இடம்பெற்ற வேளையில் குறித்த பணப்பையில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் மாத்திரமே இருந்துள்ளது என்றும் தெரியவந்துள்ளது.

இந்த சித்திரிக்கப்பட்ட கொள்ளைச் சம்பவத்துக்காக ஈடுபடுத்தப்பட்ட உந்துருளியை தேடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள அதேவேளை, முறைப்பாட்டாளரான நிறைவேற்று அதிகாரி மற்றும் அவரது மனைவியின் சகோதரன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சினத்தின் குணம்!

ஒரு மனிதன் கோபப்படும் போது அவனை நன்றாக கவனித்துப் பாருங்கள்... ஏதாவது ஒரு மிருகத்தின் சாயல் அவன் முகத்தில் தெரியும்!

முகம் அழகாக இருப்பது எப்போது? அவன் புன்னகையோடு இருக்கும் போதுதான்.கோபமாக இருக்கும்போது முகம் அழகாக இருக்காது.

சேர்.. கோபத்திலே இருக்கார்... இந்தக் கோபம் குறைவதற்குள்ளே ஒரு போட்டோ எடுத்துக்கொள்... அழகாக இருக்கும் என யாரும் சொல்வதில்லை.

போட்டோ எடுப்பவர் கூட ... எடுப்பதற்கு முன்னர் .. முகத்தைக் கொஞ்சம் சிரித்த மாதிரி வைத்துக் கொள்ளுங்கள் சேர்.. என்று தான் சொல்லுவார்.

முகத்தை கொஞ்சம் கடுகடுப்பாக வைத்துக்கொள்ளுங்கள் சேர்.. அப்போது தான் நன்றாக அமையும்! என்று சொல்ல மாட்டார்.

ஓர் உண்மை என்ன தெரியுமா? கோபம் மனதையும் கெடுக்கும் உடம்பையும் கெடுக்கும். கோபப்படுகிறவர்களின் ஆயுள்காலம் குறைகிறது என்பது விஞ்ஞான உண்மை. சிரிப்பவர்களது ஆயுள்காலம் அதிகாரிக்கும் என்பதும் விஞ்ஞான உண்மை.

கோபப்படுபவர்களை யாருமே விரும்புவதில்லை. கோபப்படும் அப்பா அம்மாவிடம் பிள்ளைகள் நெருங்காது.கோபப்படும் அதிகாரியிடம் ஊழியர்கள் நெருங்க மாட்டார்கள். கோபப்படும் ஆசிரியரிடம் பிள்ளைகள் நெருங்குவதில்லை.

அவன் எப்போது பார்த்தாலும் வள்..வள் .. என்று விழுவான்.. அதனாலே எப்போதும் அவன் பக்கத்திலேயே இருக்கணும் என்று ஆசைப்படுகிறேன்! என்று ஒருத்தன் சொன்னால் அவனை இவன் வேடிக்கை பார்க்க ஆசைப்படுகிறான் என்று அர்த்தம்!

சரி.. இந்தக் கோபம் எதனாலே வருகிறது? இயலாமையினாலே தான் வருகிறது. நீங்கள் நினைப்பதை நிறைவேற்றக்கூடிய சாமர்த்தியம் உங்களிடம் இல்லை என்கிறபோது அது கோபமாக வெளிப்படுகிறது... அவ்வளவுதான்!

திறமையுள்ளவன் கோபப்பட வேண்டிய அவசியமே வராது! ஒரு உண்மையான கவிஞனிடம் போய் ஒரு கவிதை எழுதிக்காட்டுங்கள் என்று சொன்னால் அவன்உடனே எரிச்சலடையக்கூடாது.. எரிச்சல் வந்தால் அது அவனது இயலாமையைக் காட்டுகிறது.

சிற்பி சிலை செதுக்குவதற்கு கோபப்படக்கூடாது! ஓர் அதிகாரி சொன்னார்...

நீங்கள் சொல்வது எல்லாம் சரிதான். சேர்.. இருந்தாலும் கோபப்படவில்லை என்றால் வேலை நடக்காது சேர்.. அதனாலே தான் தினமும் அலுவலகத்திலே கத்திக்கொண்டு இருக்கிறேன்! என்றார். ஆனால் உண்மை என்ன தெரியுமா?

கத்துவதனாலே.. கத்துவது தான் நடக்குமே தவிர காரியம் நடக்காது..! வேலை நடப்பது போன்ற ஒரு பாவனை நடக்கும். அவ்வளவுதான். தவறு செய்பவர்களுக்குத் தண்டனை கத்துவது மட்டுமல்ல.

திட்டு வாங்குகின்ற யாரும் தான் செய்தது தவறு என ஒத்துக்கொள்வது இல்லை. அதை அவர்கள் உணர்வதுமில்லை. அப்படி இருக்கும்போது திட்டுவதனாலே என்ன பிரயோசனம்? திட்டுவதன் நோக்கம் என்ன? திட்டு வாங்குபவர்கள் திருந்த வேண்டும் என்பது தானே!

நோக்கம் நிறைவேறாது என்றால் எதற்காக கத்த வேண்டும்.

திட்டுவதன் மூலமாகவே ஒருத்தரைத் திருத்த முடியும் என்றால் திட்டுபவனையெல்லாம் கூப்பிட்டு கொஞ்ச நேரம் திட்டிவிட்டு போய் வா இனிமேல் நீ திருந்திவிட்டாய்! என்று சொல்லிவிடலாமே!

இதிலே நாம் முக்கியமாக புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்... கோபம் என்பது நாம் அடுத்தவர்களுக்குக் கொடுக்கும் தண்டனை அல்ல.

அது நமக்கு நாமே கொடுத்துக்கொள்ளும் ஒரு தண்டனை! அடுத்தவர்களைத் திருத்துவதாக நினைத்துக்கொண்டு நம்மை நாமே கெடுத்துக் கொள்ளும் ஒரு முயற்சி!

நம்முடைய மனது கெட்டுப்போகிறது.. நமது உடலும் கெட்டுப் போகிறது... அது தான் கண்ட பலன்!

நம்முடைய ஆள் ஒருத்தன் சொன்னான். நான் கோபம் வந்தால் அதை மனிதர்கள் மேலே காட்ட மாட்டேன் சேர்... அவர்களைத் திருத்த முடியாது என்று எனக்குத் தெரியும்..! என்றான்.

வேறு என்ன செய்வாய்? என்று கேட்டேன்.

பாத்திரங்கள் பேரிலே காட்டுவேன்... வீட்டிலே இருக்கின்ற பாத்திரங்களை எல்லாம் எடுத்து வெளியிலே வீசி எறிவேன் .. என்றான்.

அதனாலே கோபம் குறைந்ததா? என்று கேட்டேன்.

எனக்குக் குறைந்தது.. ஆனால் எதிர் வீட்டுக்காரனுக்கு அதிகமாகிவிட்டது! என்றான்.

அது எப்படி! என்றேன்.

நான் எனக்குக் கோபம் வந்ததும் நேராக அவர்கள் வீட்டுக்குள்ளேயே சென்று அங்கிருந்து தானே பாத்திரங்களை வெளியிலே வீசி எறிகிறேன்! என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

## தேர்தல் முடிவுகள்

போட்டியிட்ட அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் ஒவ்வோர் அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு மொத்த உள்ளூராட்சி அதிகார சபை அதிகார பிரதேசத்தினுள் பெற்றுக் கொள்ளும் மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக அவர்களின் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

அதன் பிரகாரம் 8356 உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அதற்கமைய இம் முறைமை 100% விகிதாசார முறையின் அடிப்படையில் உறுப்பினர்கள் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்ற ஒரு முறையாகவே உள்ளது.

அதேபோன்று உறுப்பினர்களை நியமனம் செய்கின்ற போது வட்டாரத்திற்காக போட்டியிட்டு வெற்றீட்டிய அனைத்து வேட்பாளர்களும் கட்டாயமாக அந்த வட்டாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அச்சபைக்கு நியமனம் செய்யப்படுகின்றனர்.

அதற்கமைய வட்டாரத்திற்கு பொறுப்பு கூறுகின்ற உறுப்பினரொருவர் இம்முறைமையின் மூலம் கட்டாயமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். ஏதேனும் ஒரு கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவிற்கு விகிதாசாரமாகக் கிடைக்க வேண்டிய உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கையை விட அவர்கள் வெற்றியீட்டியுள்ள வட்டாரங்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படின் வெற்றியீட்டிய வட்டாரத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு மேலதிகமாக உரித்துப் பெறும் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கைக்காக மேலதிக நபர்களின் பட்டியலிலிருந்து அல்லது வேட்பாளர்களின் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்படாத வேட்பாளர்களிலிருந்து பெயர் குறிப்பதற்கு கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவருக்கு அதிகாரம் காணப்படுகின்றது.

அதேபோன்று ஒரு கட்சி அல்லது சுயேட்சைக் குழு அவர்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய விகிதாசாரமாக உரித்துடைய உறுப்பினர் எண்ணிக்கையை விட வட்டார மட்டத்தில் வெற்றியீட்டி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமெனில், அந்த அதிகரித்த எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கை யொன்றினால் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்க முடியும். மேலும் அதிகரிக்கின்ற ஆசனங்களின் எண்ணிக்கை தொங்கு ஆசனம் (Over Hang)என அழைக்கப்படும்.

இவ்வாறு உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கவில்லையெனில், ஏனைய அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக அவர்களுக்கு உறுப்பினர் பதவிகளை வழங்குவதற்கான சாத்தியப்பாடு இல்லையென்பதால், அவ்வாக்காளர்களுக்கு ஏற்படக்கூடிய அநீதி தவிர்ப்பதற்காக தொங்கு ஆசனம் (Over Hang) இச்சட்டத்தினுள் தோன்றியுள்ளது.

இதன் பிரகாரம் இத் தேர்தலில் 385 உறுப்பினர்கள் தொங்கு ஆசன முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். எனவே 341 உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கும் மொத்தமாக (5092+3264+385) 8741 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

## தொங்கு ஆசனங்கள் (Over Hang)

கொழும்பு மாவட்டத்தின் 13 உள்ளூராட்சி சபைகளுள் 8 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 29 ஆகும். கம்பஹா மாவட்டத்தின் 19 உள்ளூராட்சி சபைகளுள் 13 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன.

தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 28 ஆகும். களுத்துறைமாவட்டத்தின் 17 உள்ளூராட்சி சபைகளுள் 11 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 16 ஆகும்.

கண்டி மாவட்டத்தின் 22 உள்ளூராட்சி சபைகளுள் 9உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 17 ஆகும். மாத்தளை மாவட்டத்தின் 13 உள்ளூராட்சி சபைகளுள் 7 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆகும். நுவரெலியா மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி சபைகளுள் [illegible] உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 8 ஆகும்.

காலி மாவட்டத்தின் 20 உள்ளூராட்சி சபைகளுள் 18 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 32 ஆகும். மாத்தறை மாவட்டத்தின் 17 உள்ளூராட்சி சபைகளுள் 14 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 18 ஆகும். அம்பாந்தோட்டை மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி சபைகளுள் 9உள்ளூராட்சிசபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 17 ஆகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் 17 உள்ளூராட்சி சபைகளுள் 6 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆகும். கிளிநொச்சி மாவட்டத்தின் 3 உள்ளூராட்சி சபைகளுள் 1 உள்ளூராட்சி சபையில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆகும்.

மன்னார் மாவட்டத்தின் 5 உள்ளூராட்சி சபைகளுள் 3உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆகும். வவுனியா மாவட்டத்தின் 5 உள்ளூராட்சி சபைகளுள் 5 உள்ளூராட்சி சபைகளிலும் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆகும்.

வவுனியாமாவட்டத்தில் மட்டுந்தான் சகல உள்ளூராட்சி சபைகளிலும் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. முல்லைத்தீவு மாவட்டத்தின் 4 உள்ளூராட்சிசபைகளுள் 2 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி சபைகளுள் 8 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆகும். அம்பாறை மாவட்டத்தின் 20 உள்ளூராட்சி சபைகளுள் 9 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆகும். திருகோணமலை மாவட்டத்தின் 13 உள்ளூராட்சி சபைகளுள் 6 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆகும்.

குருநாகல் மாவட்டத்தின் 21 உள்ளூராட்சி சபைகளுள் 16 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 38 ஆகும். புத்தளம் மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி சபைகளுள் 5 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 7 ஆகும்.

அநுராதபுரம் மாவட்டத்தின் 19 உள்ளூராட்சி சபைகளுள் 16 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 31 ஆகும். பொலநறுவை மாவட்டத்தின் 8 உள்ளூராட்சி சபைகளுள் 4 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 7 ஆகும்.

பதுளை மாவட்டத்தின் 18 உள்ளூராட்சி சபைகளுள் 7 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும். மொனராகலை மாவட்டத்தின் 10 உள்ளூராட்சி சபைகளுள் 8 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும்.

இரத்தினபுரி மாவட்டத்தின் 17 உள்ளூராட்சி சபைகளுள் 9 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆகும். கேகாலை மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி சபைகளுள் 7 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு 'ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவருடனான பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் கையாளுங்கள்

## இந்தியா வலியுறுத்து


(கொழும்பு)

இந்திய மீனவர்களுடனான பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் கையாள வேண்டும் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு 54 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டமை குறித்து கருத்து வெளியிடும்போதே இந்திய உயர்ஸ்தானிகராலயம் இவ்வாறு தெரிவித்துள்ளது. (நி-4)



# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## ஆலயங்களுக்கு கோ தானம்!

**(தொடர்ச்சி)**

***ஊர் தோறும் ஆலயம் அமைத்த நம் முன்னோர்கள் ஆலயத்துக்கு வரும் சிவனடியார்களுக்கும் இறை தொண்டர்களுக்கும் இல்லை என்று சொல்லாமல் அன்னதானம் கொடுத்தல், தாகத்துக்குத் தண்ணீர் அளித்தல், விசிறி வழங்குதல், ஆடைகள் கொடுத்தல் என்று அள்ளி அள்ளிக் கொடுத்தனர்.***

இதனால்தான் அவர்களிடம் தானம் செய்யும் பண்பு பின்னிப்பிணைந்திருந்தது. அவர்கள் வழியில் வந்த நாம் அவர்கள் அளவுக்குத் தானம் வழங்க இயலாவிட்டாலும் ஓரளவாவது தானம் செய்ய வேண்டாமா? அதற்காகவே ஆலயங்களுக்கு 20 வகை தானம் செய்யலாம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த 20 தானங்கள் வருமாறு,

1.கோ தானம் 2.அன்னதானம் 3.பாத்திர தானம் 4.காணிக்கை அளிக்க தட்சனை தானம் 5.சொர்ண தானம் 6.ஆடை தானம் 7.பூமி தானம் 8.தீ தானம் 9.தானியங்கள் தானம் 10.மணி தானம் 11.ஆபரண தானம் 12.திருவிழா வாகன தானம் 13.புத்தகம் தானம் 14.மாங்கல்ய தானம் 15.காய்கறிகள் தானம் 16.பஞ்சலோக தானம் 17.பழ வகைகள் தானம் 18.பானகம், மோர் தானம் 19.சங்கல்ப தானம் 20.திருமண உதவிக்கான கல்யாண தானம்.

இந்த 20 வகை தானங்களில் உங்களால் முடிந்த தானத்தை உங்கள் குல தெய்வ ஆலயத்துக்குச் செய்தால் அதன் மூலம் கிடைக்கும் புண்ணிய பலன்கள் அளவிட முடியாதது.

அதிலும் ஆலய தான வகைகளில் முதல் இடத்தில் உள்ள கோ (பசு) தானம் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பசு தானம் கொடுப்பது அகில உலகையும் தானம் கொடுப்பதற்குச் சமமாகும்.

ஏனெனில் பசுவின் உடம்பில் 14 உலகங்களும் அடங்கி உள்ளன. எனவே தான் பசு தானம் உயர்ந்தது என்று தர்ம சாஸ்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழும் கால்த்தில் ஒருவர் ஒரு தடவையாவது ஆலயத்துக்குப் பசு தானம் செய்தல் வேண்டும். பசுவுக்குப் பதில் ஒருபோதும் பணம் கொடுக்கக் கூடாது.

பசுவை நம் கையால் வாங்கிக் கொடுக்க வேண்டும். கன்றுடன் உள்ள பசுவையே தானம் செய்ய வேண்டும். அந்தப் பசுவைப் பராமரிக்கத் தேவையான நிதியைக் கொடுப்பது மேலும் புண்ணியம் தரும்.

யார் ஒருவர் பசு தானம் செய்கிறாரோ அவரது முந்தைய 7 தலைமுறைகளும் பிந்தைய 7 தலைமுறைகளும் மோட்சம் செல்லவழி உண்டாகும் என்பது ஐதீகம்.

பசு தானம் செய்வதால் கிரிகடன், பித்ருகடன், தேவகடன் ஆகிய மூன்று கடன்களும் தீர்ந்து விடும். இதன்மூலம் ஆலயங்களுக்குச் செய்யப்படும் கோ தானம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

குறிப்பிட்ட காரியம் வெற்றி பெற வேண்டும் என்று நினைத்துக் கொண்டு பசு தானம் செய்தால் நிச்சயம் நினைத்தது நிறைவேறும்.

தானம் கொடுக்கப்படும் பசுக்களால் இறை மூர்த்தங்களுக்குச் சுத்தமான பாலாபிஷேகம் செய்ய முடியும். நைவேத்தியம் தடையின்றி நடக்க வழி ஏற்படும்.

அடுத்து அன்னதானம். தற்போது பெரும்பாலான ஆலயங்களில் அன்னதானம் நடத்தப்படுகிறது. அன்னதானம் செய்வதை இறைவன் நமக்குக் கொடுத்த வாய்ப்பாகக் கருதி பயபக்தியுடன் செய்ய வேண்டும்.

இரவு 9 மணிக்குப் பிறகு அன்னதானம் செய்யக் கூடாது என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## குளவி கொட்டுக்கு இலக்காகிய 15 மாணவர்கள் வைத்தியசாலையில்

(ஹற்றன்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்மோர் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகி மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாடசாலையை விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையில் இவ்வாறு குள்விக் கொட்டுக்கு இலக்காகிய 15 மாணர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (நி-4)

## மாணவர்களை ஏற்றிச் சென்ற வான்; தவறி விழுந்த சிறுவன் உயிரிழப்பு

(கொழும்பு)

வெல்லவாய - எல்ல பிரதான வீதியின் ஹுனுகெட்டிய பகுதியில் நேற்று முன்தினம் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் ஒன்றிலிருந்து தவறி வீழ்ந்த பாலர் பாடசாலை மாணவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இவ்வாறு உயிரிழந்த சிறுவன் எல்ல, ஊவா கரந்தகொல்ல பகுதியில் வசிக்கும் 5 வயதான அனுஹாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்து நடந்த நேரத்தில் வானின் சாரதி பாடசாலை மாணவர்களை அவர்களது வீட்டிற்குக் கொண்டு செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போதே எதிர்பாராத விதமாக வானின் கதவு திறக்கப்பட்டமையினால் குறித்த சிறுவன் வானிலிருந்து தவறி வீழ்ந்துள்ளான்.

அதனால் படுகாயமடைந்த சிறுவன் நிலையில் மீட்கப்பட்டு வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளான்.

இந்நிலையில் பாடசாலை வானின் சாரதியை கைதுசெய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 130 | 140 | 160 |
| தக்காளி | 80 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 50 |
| கோவா | 80 | 120 | 80 |
| கரட் | 200 | 200 | 200 |
| பூசணி | 70 | 60 | 80 |
| புடோல் | 120 | 80 | 120 |
| வாழைக்காய் | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 110 | 100 | 150 |
| பயற்றங்காய் | 150 | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 90 | 100 | 120 |
| கறிமிளகாய் | 180 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 800 |
| போஞ்சி | 160 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 60 | 30 | 40 |
| தேசிக்காய் | 140 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 160 | 140 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய ஆசிரியர் கழகத்தின் ஏற்பாட்டில் "மன்னார் சிவபூமி" நூல் அறிமுகவிழா நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கழகத் தலைவர் பேராசிரியர் க.தேவராசா தலைமையிலும் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலய ஆதினகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரன் குருக்கள் முன்னிலையிலும் இடம்பெறும்.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவர் க.பாலச்சந்திரன், சிறப்பு விருந்தினராக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் க.புவனேந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

நூலின் முதற்பிரதியை இணுவில் அண்ணா தொழிலக அதிபர் ந.திவாகரன் பெற்றுக் கொள்வார். (5-6)

# விதிமுறைகளைப் பின்பற்றாத மக்கள்; தினசரி அதிகரிக்கும் விபத்துக்கள்

(குருமன்காடு)

**வவுனியா புகையிரத நிலைய வீதியில் காணப்படும் புகையிரதப் பாதுகாப்புக் கடவையில் பொதுமக்கள் வீதி போக்குவரத்து நடைமுறைகளைப் பின்பற்றாது பயணம் செய்வதனால் தினசரி விபத்துக்கள் அதிகரித்த வண்ணமேயுள்ளன.**



வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகே காணப்படும் புகையிரத பாதுகாப்புக் கடவையின் கதவுகள் மூடப்பட்டிருக்கும் சமயத்தில் பொதுமக்கள் வீதி போக்குவரத்து நடைமுறைகளைப் பின்பற்றாது பாதையின் இரு பக்கங்களிலும் சீரற்ற முறையில் வாகனங்களைத் தரித்து வைத்தல், புகையிரத பாதுகாப்புக் கடவை மூடப்பட்டிருக்கும் சமயத்தில் வாகனத்தினைச் செலுத்துதல், புகையிரதக் கடவை திறந்தவுடன் எதிர்த்திசையில் வருகின்ற வாகனத்திற்கு வழி விடாது செல்லுதல் போன்ற செயற்பாடுகளில் பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக புகையிரத நிலைய வீதியில் தினசரி இரண்டிற்கு மேற்பட்ட விபத்துக்கள் இடம்பெற்று வருவதுடன் சில சமயங்களில் மாத்திரமே பொலிஸார் குறித்த பகுதியில் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொதுமக்கள் வீதி நடைமுறைகளைப் பின்பற்றாத நிலை தொடர்கிறது. எனவே பொதுமக்கள் வீதிப் போக்குவரத்து நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுவதுடன் குறித்த பகுதியில் பொலிஸார் கடமையில் ஈடுபடுவதற்குரிய நடவடிக்கையினை உரிய தரப்பினர் மேற்கொள்வார்களா? என சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (5-4-250)

## மக்களின் தேவைகளின் பின்பே ஏற்றுமதி செய்ய வேண்டும்

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் நெல் தேவைகள் நிறைவு செய்யப்பட்டபின் வெளி இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுவின் மேலதிக இணைப்பாளர் கே.றுசாங்கன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி பூநகரி, கரியாலை நாகபடுவான் சிறுபோக நெற்செய்கைகளுக்கான கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிளிநொச்சி மாவட்டம் வறுமையில் முதன்னிலையில் உள்ளது. அதற்கான முதன்மைக் காரணம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் கூடுதலாக ஏற்றுமதி செய்யப்படுவதுடன் உலர விடாத நெல்லாகவே விற்பனையும் செய்யப்படுகிறது.

அதற்கு பல காரணங்கள் உள்ளன. உலரவிடும் தளங்கள், களஞ்சியங்கள் போதியளவில் இல்லை. உரிய காலத்தில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யப்படுவதில்லை. விவசாயிகளும் தமது கடன்களுக்காக வருகின்ற வியாபாரிகளுக்கு தமது நெல்லினை விற்பனை செய்து விடுகின்றனர்.

மாவட்டத்தின் வறுமையினைப் போக்க வேண்டுமானால் இம்மாவட்டத்தின் நெல் மாவட்டத்திற்குள்ளேயே அரிசியாகி அது மாவட்ட மக்களின் தேவைகளை நிறைவு செய்து பின்பே ஏற்றுமதிக்காக சூழல்களை உருவாக்க வேண்டும். இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மாவட்டத்தின் அரிசி ஆலைகள் அனைத்தும் சிறப்பாக இயங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (5-4-350)

## மரக்கடத்தல் முறியடிப்பு

### ஒருவர் கைது



(நெளுக்குளம்)

சட்டவிரோதமான முறையில் அரிமரங்களை கடத்திச் சென்ற நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

நேற்று முன்தினம் மாலை கோதண்ட நொச்சிகுளம் காட்டுப்பகுதியில் இருந்து கூமாங்குளம் நோக்கி சட்டவிரோதமான முறையில் மரங்கள் கடத்தப்படுவதாக ஈச்சங்குளம் இராணுவத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலிற்கமைய அப்பகுதிக்குச் சென்ற ஈச்சங்குளம் இராணுவத்தினர் அம்பிவைத்தான் பகுதியில் வைத்து மரக் கடத்தலில் ஈடுபட்ட நபரை வாகனத்துடன் கைது செய்து ஈச்சங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த மரக்கடத்தலில் வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் பட்டா ரக வாகனம் ஒன்றும் 15 அரிமரங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (5-4-299)

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சகவாழ்வுச் சங்கத்தால் சனிக்கிழமை மாலை 2 மணிக்கு YMCA மண்டபத்தில் நடைபெறவிருந்த பல்சமயத் தலைவர்களுக்கிடையிலான விசேட கருத்தாடல் நிகழ்வு நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக நடைபெற மாட்டாது.

மேற்படி ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (5-4)

(யாழ்ப்பாணம்)


நல்லூர் றோட்டறிக் கழகத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு செயற்திட்டத்தின் அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வானது நாளை 28 ஆம் திகதி தியாகி அறக்கொடை மண்டபத்தில் இடம்பெற இருந்தது.

எனினும் வடக்கு மாகாண சுகாதாரப் பணிமனையின் அறிவித்தலுக்கு அமைய பிற்போடப்பட்டுள்ளது. (5-4)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆலயம், துன்னாலை அல்லையம்பதி சனசமூக நிலையம், துன்னாலை வல்லியானந்தம் இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து நடாத்தும் இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை துன்னாலை அல்லையம்பதி வேலர் மண்டபத்தில் இடம்பெறும். இந்த இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (5-4-13)



மல்லாவி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன் கிழமை தொழில்நுட்பம் கலாசாரம் மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமைச்சில் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

## கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் கேரளக் கஞ்சாவினை உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவர் நிற்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்ட பொலிஸார், இளைஞர் ஒருவரின் பயணப் பொதியினை சோதனையிட்டனர்.

இதன்போது பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1600 மில்லிகிராம் கேரள கஞ்சாவினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதனை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் குறித்த இளைஞனும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-4-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையான கனவுகளில் இருந்துதான் பொறுப்புக்கள் ஆரம்பமாகின்றன!

~ டயானா ஹைடன்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்

உலகம் முழுவதையும் உலுக்கி நிற்கும் கொரோனாத் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாப்பதில் நாடுகள் கடும் பிரயத்தனம் செய்கின்றன.

எனினும் தொற்று ஏற்பட்டு ஒரு வருடம் கடந்துவிட்டபோதிலும் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதுதான் உண்மை.

கொரோனாத் தடை மருந்துகள் கண்டறியப்பட்ட போதிலும் அவை சாதாரண மக்களை வந்தடைவதற்கு இன்னும் சில வருடங்கள் ஆகலாம்.

தவிர, கொரோனாத் தடை மருந்தும் உத்தரவாதமானதா? என்றால் அதுவும் ஐயத்துக்குரியதே.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தொற்று வட பகுதியை ஆக்கிரமிக்கத் தலைப்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வருவதிலிருந்து நிலைமை கட்டுக்கடங்காமல் போகிறது என்பதை உணர முடியும்.

தவிர, கொரோனாத் தொற்றின் வேகத்தைத் தடுப்பதற்கான வழிவகைகளை நம் சுகாதார அதிகாரிகள் அறிந்துள்ளனராயினும் அதனை அமுல்படுத்துவதற்கான அதிகாரம் அவர்களிடம் இல்லை.

இதனால் அவர்களின் அறிவுரைகள் பொருத்தப்பாடாக இல்லை என்பதையும் நாம் இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆக, வடபகுதியில் வேகமெடுத்துள்ள கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் வேறாக இருக்க, நம் சுகாதாரத் தரப்பின் நடவடிக்கைகள் பொருத்தப்பாடற்றதாக இருக்கிறது.

இவை ஒருபுறமிருக்க, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறியதால், இலங்கை அரசு கடுப்போடு இருக்கிறது. அரசாங்கத்தின் இந்த மனநிலையும் நமக்கு அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

அதேவேளை தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளை அழைத்து எங்கள் வடபகுதியில் வேகமாகப் பரவுகின்ற கொரோனத் தொற்றைத் தடுப்பது எங்ஙனம் என ஆராய்வார்கள் என்றால், அதுவும் நடக்கப் போவதில்லை.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், பொதுமக்கள் விழிப்படைந்தால் மட்டுமே வட பகுதியில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

ஆம், கனடாவில் பொதுப் போக்குவரத்து வண்டிகளில் ஒரு வாசகம் எழுதியுள்ளார் கள். அதில் உங்கள் பெற்றோர்களைப் பாதுகாப்பதற்காக முகக் கவசம் அணியுங்கள் என எழுதப்பட்டுள்ளது.

இங்கு நாம் கூறுவதெல்லாம், கொரோனத் தொற்றில் இருந்து உங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுங்கள். உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்ற மணி வாசகத்தை சிந்தியுங்கள்.

# இரட்டைக் குடியுரிமை உடையோருக்கு எந்த உயர் பதவிகளும் வழங்கப்படக் கூடாது

## புதிய அரசியலமைப்பிற்கான யோசனையில் சு.க

(கொழும்பு)

இரட்டை குடியுரிமை கொண்டவர்களுக்கு அரசாங்கத்தில் எந்த பிரதான உயர் பதவிகளும்வழங்கப்பட கூடாது உட்பட பல யோசனைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கான யோசனைகளில் உள்ளடக்கியுள்ளது.

இந்த யோசனைகளை அடங்கிய அறிக்கை நேற்று சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இரட்டை குடியுரிமை பெற்றவர்களுக்கு ஜனாதிபதி, பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிகள் மட்டுமின்றி, அரச நிறுவனங்கள் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் உறுப்பினர் உட்பட எவ்வித பதவி களும் வழங்கப்படக்கூடாது என அந்த யோ சனைகளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை குறித்து நாட்டில் உள்ள அனைத்து கட்சிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி பெரும் பான்மை விருப்பத்திற்கு அமைய தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனவும் சுதந்திரக்கட்சியோசனை முன்வைத்துள்ளது.

பாராளுமன்றம் இரண்டு அவைகளை கொண்டிருக்க வேண்டும். தேர்தல் முறையை கலப்பு முறையாக மாற்ற வேண்டும். அதிகார பரவலாக்கலை உறுதிப்படுத்துதல் ஆகிய யோசனைகள் அதில் முன்வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான சுதந்திரக் கட்சியின் குழுவினர் இந்த யோசனைகள் அடங்கிய அறிக்கை தயாரித்துள்ளனர். (நி-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** முலவை சந்தி, US விடுதி, ஆஸ்பத்திரி வீதி கண்டி வீதி வரை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ். பிரதேச செயலகம், ஆளுநர் விடுதி, துளசி மஹால், இலங்கை மின்சார சபை பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம், சிவப்பிரகாசம் வீதி, கோம்பயன்மணல் ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, பூநாறி சந்தி, செல்வமகால் திருமண மண்டபம், கொக்குவில் சந்தி, சம்பியன் வீதி, கொக்குவில், பிரம்படி, மாவடி, வராகி அம்மன் கோவிலடி, சாவற்காடு, காக்கைதீவு ஒரு பகுதி, ஆணைக்கோட்டை, நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம், வேலக்கைப் பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி, நவாலி, குளப்பிட்டிவீதி, கொக்குவில் மேற்கு, மருத்துவபீடம் பிரம்படி, திருநெல்வேலி ஒரு பகுதி, Stylo, மருத்துவபீட அரங்கு, ஞானபண்டிதா பாடசாலை, குளப்பிட்டி Fox Rest (Pvt) Ltd, கே.கே. எஸ்.வீதி, Print Master ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பரந்தனிலிருந்து பூநகரி ஊடாக கௌதாரிமுனை வரை, முட்கொம்பனிலிருந்து அரசபுரம் வரை, நெற்பிலவு, பள்ளிக்குடா, செம்மண்குன்று, ஞானிமடம், கறுக்காய்த்தீவு, 5V படைப்பிரிவு, பிரதேச செயலகம் பூநகரி, 66 ஆவது படைப்பிரிவு பூநகரி, 66 ஆவது படைப்பிரிவு 2 பூநகரி, பரந்தன் இலங்கை தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# த பினான்ஸ் வைப்பாளர்களுக்கான கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

த பினான்ஸ் வைப்பாளர்களுக்கான கூட்டமொன்று நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடை பெறும்.

சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(ம-3)

# பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் பொது நூல் நிலையத்தினால் நாளை மறுதினம் திங்கட்கிழமை புத்தூர் ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருந்த வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவும் புதுவைநாதம் சஞ்சிகை வெளியீடும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு சம்பந்தப்பட்ட திகதி பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## வரலாறு உன்னை வாழ்த்தட்டும்

❖ பிறர் புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி, கடவுள் உனக்கு அருள்புரிவதில் இருந்து தவறமாட்டார். ஆனால் நீ, உண்மை என்னும் பாதையிலிருந்து அணுவளவு கூட பிறழக்கூடாது.

❖ அன்பின் மூலமாக செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்.

❖ எல்லா உயிர்களும் தெய்வம் என்பது உண்மையே. ஆனால், அனைத்திலும் உயர்ந்த தெய்வம் மனிதனே.

❖ உழைப்பும், உறுதியும் மிக்க சிங்கம் போன்ற இதயம் படைத்த ஆண்மகனுக்கே திருமகளின் அருள் கிடைக்கும்.

❖ வாழ்வின் லட்சியம் இன்பம் என்று எண்ணி நாம் ஓடிக் கொண்டே இருக்கிறோம். ஆனால், அறிவு தான் நம் வாழ்வின் உண்மையான லட்சியம்.

❖ நாம் அனைவரும் இப்போது கடுமையாக உழைப்போம். இது தூங்குவதற்கான தருணம் அல்ல.

❖ ஆணோ பெண்ணோ, வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் தன்னம்பிக்கை தான். என்னால் இயலாது என்று சொல்பவர்கள் வரலாற்று புத்தகத்தைக் கூட தொடுவதற்கு தகுதியற்றவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–305

# எம்மவர் மத்தியில் விற்றமின் D குறைபாடு




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உடல் தேகாரோக்கியம் என்பது செல்வங்களுள் முதன்மைச் செல்வமாகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். அதிலும் உடலிலுள்ள நோயெதிர்ப்பு சக்தி நலிவடையும் போது பல விதமான தொற்றும் நோய்கள் எம்மை இலகுவில் தாக்கிவிடுகின்றன. இந்த வகையில் காவிகளால் பரவும் நோய்களைத் தவிர்த்துப் பார்த்தால் அநேகமான வைரஸ் நோய்கள் இவ்வாறான தொற்றும் நோய்களில் அடங்கிவிடுகின்றன. இவற்றினால் எம்மவர்களுக்கு ஏற்படும் தாக்கம் அதிகரிப்பதாகவே காணப்படுகின்றது.

வழக்கமான இயற்கையான நோயெதிர்ப்புச் சக்திக்கு எமது உடலில் நடைபெறும் அனுசேபங்களும் உடலுக்கு கிடைக்கும் சக்தியினளவைத் தீர்மானிக்கின்றன. நோயெதிர்ப்பு சத்தியை வலுவூட்டலுடன் அதிகரிப்பதாக இருந்தால் அதற்குத் தேவையான ஊட்டச்சத்துகளை எமது உடலுக்கு வழங்குதல் அவசியமானதாகும். அந்த வகையில் உடலுக்கு தேவையான முக்கியமான ஊட்டச்சத்தாக விற்றமின் டி அமைகின்றது.

சாதாரணமாக விற்றமின் டி ஆனது இயற்கையாகவே சூரிய ஒளி எம்மீதுபடும் போது எமது தோலினால் அது உற்பத்தி செய்யப்பட்டு உடலுக்குள் கடத்தப்படுகின்றது. அதற்காக இதனை சூரிய ஒளி விற்றமின் எனவும் அழைப்பதுண்டு. அதனால் அதிகாலை சூரிய நமஸ்காரம் அவசியமானதென எடுத்துக் கூறியதற்கு நியாயமான காரணம் உண்டு.

விற்றமின் டி ஆனது இயற்கையாகவே எமது உடல் உருவாக்குவதனால் அதனைப் பற்றி பலரும் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. மாறாக அதனது குறைபாட்டால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் அதிகளவில் சிந்திப்பதில் வாய்ப்பில்லை. பொதுவாகவே மேற்குலக நாடுகளில் விற்றமின் டி இன் குறைபாடு உள்ளதாக அறிய முடிந்தாலும் உலகளவில் ஒரு பில்லியன் மக்கள் விற்றமின் டி இன் குறைபாட்டால் அவதிப்படுவதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

அதிலும் ஆச்சரியப்படத்தக்க விடயமெனில் தெற்காசிய நாடுகளில் 80 சதவீதமானவர்களுக்கு விற்றமின் டி குறைபாடு உள்ளதாக அறியப்படுகின்றது.

ஆனால் ஆசியாவிலுள்ள மனிதர்களில் கணிசமான அளவினர் இரத்தத்தில் குறைந்தளவு 25 ஹைட்றொக்சி விற்றமின் டி கொண்டிருப்பதனால் பல நோய்களுக்குள்ளாவதாக அறியக்கிடைக்கின்றது.


தற்போதைய இயந்திர வாழ்க்கையில் அதிகாலையில் அதிலும் சூரியன் உதிக்க முன்னர் வேலைக்குபோகும் ஒருவர் வேலையில் ஏசியில் பணி புரிந்து விட்டு சூரியன் மறையும் போது வீடுதிரும்புகின்றனர். இவ்வாறு இருக்கும் போது அவர்களுக்கு சூரிய ஒளி உடலில் படுவதற்கான வாய்ப்பு குறைவடையும் நிலை ஏற்படுகின்றது. அதனுடன் அவர்களது உணவும் அவசர உணவாக அமைந்து விடுவதனால் வேண்டிய அனைத்து ஊட்டச் சத்துக்களும் உணவுடன் உட்கொள்ள வாய்ப்பு இல்லாது போய்விடுகின்றது.

இவ்வாறு தொடர்ந்து பல நாட்கள் இருக்கும் போது அவர்களுக்கு தேவையான விற்றமின் டி இன் அளவு குறைவடையும் போது பலவிதமான நோய்க்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கி விடுகின்றன.

குறிப்பாக பெண்களுக்கு இந்த குறைபாடு அதிகமாக வருவ தற்கான காரணமாக அவர்கள் உட்கொள்ளும் உணவில் சமநிலை காணப்படாதிருப்பதும் சூரிய ஒளியில் அவர்களது உடல் படாதிருப்பதுமாகும். இவ்வாறான நிலை அதிகமாக வேலை செய்யும் பெண்களுக்கு வருவதாக கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

கொரோனா தாக்கத்தினால் வீடுகளிலேயே அடங்கியிருக்கும் போது இப்பிரச்சினை இன்னும் அதிகமாக வாய்ப்புக்கள் உண்டு. எமது உடலில் சூரிய வெளிச்சம் படாமல் இருந்தால் இந்தப் பிரச்சினை இன்னும் அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு என்பதனால் விடுமுறைகள் அல்லது பணிபுரியாதிருக்கின்ற நாட்களில் சூரிய வெளிச்சம் படுவதற்கான சுற்றுலாக்கள் அல்லது வீடுகளிலேயே அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். அவசியம் அதிகாலை சூரிய வெளிச்சம் படுவதற்கான ஏற்பாடுகளை செய்யும் அதே நேரத்தில் விற்றமின் டி அதிகமுள்ள உணவுகளை எமது அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ளலாம். தாவரப்பொருட்களில் விற்றமின் டி அதிகளவில் கிடைப்பது குறைவு என்பதனால் விலங்குப் பொருட்களில் குறிப்பாக மீன் வகைகளில், முட்டைக் கருவில் அதிகமாக விற்றமின் டி காணப்படுகின்றது. மாமிசம் உண்பவர்கள் குறிப்பிட்ட மீன் வகைகளை உணவாக உட்கொள்ளும் போது தேவையான விற்றமின் டி யை தமது உடலுக்கு உள்ளெடுத்துக் கொள்ளும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். மாறாக பால் வகைப் பொருட்களிலும் விற்றமின் டி காணப்படுவதனால் அவற்றையும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 318




விற்றமின் டி இனை உணவிலிருந்து பெறுவதுடன் அதிகாலையில் சூரிய ஒளிபடும் படி நாம் சிறுசிறு வேலைகள் எமது சிறிய வீட்டுத் தோட்டத்தில் செய்யும் போது எம்மையும் அறியாமலேயே எமது உடல் சூரிய ஒளியில் படுவதற்கான வாய்ப்புக்களை நாம் ஏற்படுத்திக் கொடுக்கின்றோம். விவசாய பெருமக்கள் இது விடயத்தில் பாக்கியசாலிகள் என கூறலாம். நாள் முழுக்க அவர்கள் வயலில் வேலை செய்வதனால் அவர்களுக்கு விற்றமின் டி பிரச்சினை எழ வாய்ப்பே இல்லை. ஆதலினால் நிறுவனங்களில், திணைக்களங்களில், குளிரூட்டிக்குள் பணிபுரிபவர்கள் தம்மை சூரிய ஒளி படும் படி வசதி செய்து கொள்வது அவசியமானதாகும்.

குறிப்பாக கருமையான தோலுள்ளவர்களுக்கு சூரிய ஒளி தோலினூடாக உட்செல்வது மிக குறைவு என்பதனால் ஓரளவு நிறமுள்ளவர்களும் பொது நிறமுள்ளவர்களும் அவசியம் தமது உடலை அதிகாலையில் சூரிய ஒளிபடும் படி செய்து கொள்வது அவசியமானதாகும். கிழமை இறுதி நாட்களில் குறிப்பாக ஞாயிற்றுக் கிழமைகளில் கிராமப் புறங்களில் நல்லெண்ணெய்க் குளியல் செய்வது வழக்கமான செயற்பாடாகும். நாளாக நாளாக நகர்ப்புறம் நோக்கி நகர்ந்ததனால் இவ்வாறான பாரம்பரிய செயற்பாடுகளை மறந்து தற்போது ஊட்டச்சத்து காணாமல் அவதிப்பட நேர்ந்திருக்கின்றது.

எமக்கான உடல் தேகாரோக்கியத்தை நாம் கவனிக்க வேண்டியது அவசியமானதாகும். விற்றமின் டி இன் அளவு குறைவடையும் போது உடலில் கல்சியத்தினளவும் பொஸ்பரசின் அளவும் சிறுகுடலினால் அகத்துறிஞ்டசப்படுதல் குறைவடையத் தொடங்கும். இதனால் உடல் மெலிவடைவதுடன் உடலில் அனைத்து இடங்களிலும் நோவும் உருவாகும்.

கல்சியத்தின் அளவு குறைவடையும் போது எமது எலும்புகளிலிருந்து உடல் தனக்குத் தேவையான கல்சியத்தை எடுக்கத் தொடங்குவதனால் பிரச்சினை பல உருவாக வாய்ப்புக்கள் உண்டு. கொட்லிவர் எண்ணெய் அல்லது மீனெண்ணெய்க் குளிசைகளை உட்கொள்வதால் விற்றமின் டி இனை உமது உடலுக்கு பெற முடியும் என தெரிகின்றது.

எமக்குத் தேவையான விற்றமின் டி போன்ற ஊட்டச் சத்துக்களை உடனடியாகவே தயாரித்துக் கொள்ள வீட்டிலொரு சிறு தோட்டமமைத்து அதில் எம்மை ஈடுபடுத்திக் கொண்டால் இயற்கையாகவே எமது உடல் விற்றமின் டி யை தயாரிப்பதுடன் எமது உடலுக்கான தினமொரு பயிற்சியாகவும் அது மாறிவிடும். தொடர்ந்து கதிரையில் வேலை செய்யும் போது உடற்பயிற்சி இன்மையால் உடலில் பல விளைவுகள் ஏற்படுவதற்கு நாமே காரணமாகி விடுவதனால் இவையனைத்தும் சிந்தித்து எம்மை ஓரளவுக் கேனும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்தி எமது மூளைக்கும் நரம்புத் தொகுதிக்கும் இன்னும் அனைத்து உறுப்புக்களுக்கும் இரத்த ஓட்டத்தை செம்மையாக சீர் செய்வதற்கு சிறிய உடற்பயிற்சிகளை வீட்டுத்தோட்டத்திலேயே செய்து கொள்ளலாம். இதற்காக இயந்திரங்களை வாங்கி அதிலே நடந்து பார்ப்பதும் இரும்புகளை தூக்கி உடற்பயிற்சி செய்யவும் தேவையில்லை. வீட்டுத் தோட்டத்தில் செய்யும் ஒவ்வொரு வேலையும் பயிர்களை வளர்ப்பதற்கும் அதிலிருந்து நஞ்சற்ற உடனடியான சிறந்த பழங்கள், காய்கறிகளைப் பெற வாய்ப்புக்கள் அதிகம். ஆதலினால் தான் இவ்வருடத்தை உலக பழவகைகள் மற்றும் மரக்கறிப் பயிர்களுக்கான ஆண்டாக உலக உணவு மற் றும் விவசாய ஸ்தாபனம் பிரகடனப் படுத்தியிருக்கின்றது.

அனைத்தும் எமது தேக நலன் சார்ந்த விடயமாதலால் நாமும் எமதுடலை அவசியம் கவனிப்பதுடன் தேவையான ஊட்டச்சத்துக்களையும் பெற வழிசெய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 நாட்களில்...

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 79 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்ததுடன் கடந்த 3 நாட்களிலும் 133 பேருக்கு யாழ்.மாவட்டத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து யாழ். மாவட்டத்தில் இதுவரை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 820 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சிறீதரன் எம்.பி...

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டிற்குள் வாள், கண்ணாடி போத்தல், இரும்புக் கம்பிகளுடன் வீட்டுக்குள் நுழைந்த 4 மோட்டார் சைக்கிளில் வந்த 8 பேர் கொண்ட குழு பாராளுமன்ற உறுப்பினரின் மகன் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டது.

அவரது மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த குழுவின் வீடியோ காட்சிகள் சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளன.

யாழ்ப்பாண பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,18,33)

## யாழ்.போதனா...

மருத்துவர்கள் இருவர், தாதிய உத்தியோகத்தர்கள் மூவர், சுகாதார ஊழியர்கள் நால்வர், மருத்துவ பீட மாணவர்கள் இருவர், தாதிய மாணவர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சுத்திகரிப்புப் பணியாளர் ஒருவரும் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றார். (ம-3,33)

## 12 புலனாய்...

யுள்ளன.

இந்த நிலையில் ஐ.நா பொதுச் சபையின் 46ஆவது அமர்வில் கூடுதல் நிதியை கோருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை ஆய்வு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொது இயக்க செலவுகளுக்காக 137,400 அமெரிக்க டொலர்களும் ஒப்பந்த சேவைகளுக்கு 130,000 அமெரிக்க டொலர்களும் ஊழியர்களின் பயணத்திற்கு 41,200 அமெரிக்க டொலர்களும் கோரப்படுகிறது.

தவிர, பங்கேற்பாளர்கள் மற்றும் சாட்சிகளைச் சந்திக்க 75,400 அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட வேண்டும்.

விசாரணை மற்றும் சான்றுகள் சேகரிக்கும் பொறிமுறைக்கு இலங்கையில் 12 புலனாய்வாளர்களை நியமிக்க மனித உரிமைகள் பேரவை தீர்மானித்துள்ளது. (ம-3)

## கனேடியத் தூது...

சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் (National Languages Equality Advancement Project (NLEAP)) முன்னேற்றம் தொடர்பில் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினொன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை நேரில் சென்று கலந்துரையாடினார்.

நேற்று மாலை யாழ்.பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்த கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினொன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதிகள், பதிவாளர் மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார். (ம-3)

## அரசின் கைக்...

களாக செயற்படும் சில தமிழ்க் கட்சிகள் பிரேரணையினால் தமிழ் மக்களுக்கு எந்த பிரயோசனமும் இல்லையென்ற பிரசாரத்தினை முன்னெடுத்து வருவதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள மட்டு. ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

எந்தெந்த கருவியை எந்தெந்த வகையிலே உபயோகிக்க முடியும் உச்சளவுக்கு ஒரு கருவியை எந்தளவுக்கு உபயோகிக்க முடியும் என்று தெரிந்தவர்களுக்கு ஐ.நா. மனித உரிமை பேரவை தீர்மானம் வலுவான தீர்மானம் என்று தெரியும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-3)

## இளைஞன்...

செல்வராசா யதுசன் (வயது-19) என்ற இளைஞனே இவ்வாறு அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## யாழ்...

சாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆய்வுகூடங்களில் 634 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

29 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை கைதிகள் இருவர். காரைநகரில் சுயதனிமைப்படுத்தப்பட்ட மூவர்,

திருநெல்வேலி பொதுச் சந்தையைச் சேர்ந்த மேலும் இருவர், தெல்லிப்பழை வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவர், மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்ற ஒருவர்,

வவுனியா மாவட்டத்தில் ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களுடன் தொடர்புடைய இருவர் என வடக்கில் 29 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33,250)

## பளையில்...

துள்ளதுடன், தந்தை படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளையின் இத்தாவில் பகுதியில் நேற்று குறித்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் பளை தர்மக்கேணியைச் சேர்ந்த சற்குணம் சாரங்கன் (வயது-8), சற்குணம் சாருஜன் (வயது-16) எனும் சிறுவர்களே உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவர்களின் தந்தை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். (ம-3,33,60, 100,315)

## சைக்...

துரை (வயது-75) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த முதியவர் நேற்று முன்தினம் தனது வீட்டிலிருந்து துவிச்சக்கரவண்டியில் மருதனார்மடம் பகுதிக்கு சென்றுள்ளார்.

இதன்போது திடீர் சுகயீனம் காரணமாக துவிச்சக்கரவண்டியில் இருந்துகீழே விழுந்ததில் அவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

# மாணவர்களுக்கு ஆயுதப் பயிற்சி

### இரு ஆசிரியர்கள் கைது

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கிய குற்றச்சாட்டில் மத்ரஸா ஆசிரியர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளத்தில் உள்ள மத்ரஸா பாடசாலை மாணவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கிய குற்றச்சாட்டில் குறித்த மத்ரஸா பாடசாலை ஆசிரியர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரியான அரச சட்டவாதி நிஷாரா ஜயரட்ன தெரிவித்தார்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலில், குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால், குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## வரணியில்...

றுக்குள் நுழைந்த வன்முறைக் கும்பல் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் மற்றும் உடைமைகளை அடித்து நொருக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இரண்டிற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த வன்முறை கும்பல் மோட்டார் சைக்கிள், ஆட்டோ ஆகியவற்றை அடித்து நொருக்கியதுடன், வீட்டிலிருந்து இளைஞன் மீதும் கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றிருக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-3)


தன நிதானய
திகதி - 2021.03.26
சீட்டிழுப்பு இலக்கம் - 475
L 49 61 73 75
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 26.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2733
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 08 16 44 61

மஹஜன சம்பத
திகதி 2021/03/26
சீட்டிழுப்பு இலக்கம் 4438
ஆங்கில எழுத்து Q 1 7 3 5 7 8

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/03/26
சீட்டிழுப்பு இலக்கம் 1586
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 03 21 31 52

மெகா பவர்
திகதி 26/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0800
A 16 31 39 77 78

அத கோடிபதி
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 1234
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 26.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 121,895,785
வெற்றி இலக்கங்கள் 09 50 62 68 R

சனிதா
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 3564
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 26.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,512,276
வெற்றி இலக்கங்கள் 33 43 47 60 G

சுப்பர் ஜக்பொட் 2,701,794/=
திகதி: 26.03.2021
வெற்றி வாரம்: 3115
வர்ணம்: கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 04 13 18 22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,257,020

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1408
நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 26/03/2021
தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் M 28 51 55 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் 51,011,824/=

சீட்டிழுப்பு வாரம் 707
வர்ணம் பச்சை
திகதி 26.03.2021
வெள்ளி
H 06 16 20 39
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,524,870
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழா - 2021 ஒத்திவைப்பு

சங்கத்தின் 50ஆவது ஆண்டினை முன்னிட்டு இன்று (27.03.2021) சனிக்கிழமை நடைபெறவிருந்த பொன்விழா நிகழ்வுகள் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

விழாக்குழுவினர்
உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

(C-1820)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன், அச்செழு வீதியில் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.)
பலாலி வீதி அருகாமையில் இக்காணி உள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு


**077 632 3041**
**076 707 0743**

(6352)

## ST. ANTONY'S Computer

acer DELL hp

2 YEARS WARRANTY



மடிக்கணினிகள் (Laptops)
65,000/= ரூபாய் முதல்

(C-1807)

☎-021 222 4865 | 075 069 8608
No. 189, K.K.S Road, Jaffna Town.

## கடை, காணி விற்பனைக்கு

- நுணாவில் A9 வீதியோடு 12 பரப்புக் காணி.
- கோப்பாய் இராச பாதை வீதியில் 7 பரப்புக் காணி.
  [1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.]
- யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் 1 1/2 பரப்புடன் கடை.

விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

(6352)

**077 275 7484**
**021 221 3777**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

### af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org

(6228)

021 222 8093 — புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(6383)

077 436 6704, 077 179 1963

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் வீதியில் மெயின் றோட்டுடன் முடமாவடிச் சந்திக்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(நல்லூர் முருகன் ஆலயத்திலிருந்து 250 மீற்றர் தூரம்.)

(6362)

**077 288 0152**
**077 468 3354**

## காணி தேவை

யாழ். மாநகர சபை, கோப்பாய், நல்லூர் பிரதேச சபைகளுக்கு உட்பட்ட இடத்தில் 20 - 30 வரையான பரப்பளவு காணி தேவை.

(6362)

**076 221 2037**

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

No 15 Siraambiyady Lane, Off Stanley Road, Jaffna.
Hot Line 077 144 8161 | Office 021 222 4550

(C-1826)

**வெளிநாடு செல்ல இருப்போருக்கான பாடநெறிகள்**

- IELTS ( Acadamic\ General)
- IELTS LIFE SKILL ( Spouse Visa )

**தொழிற்துறை DIPLOMA பாடநெறிகள்** (04 MONTHS)

- Strategic Management
- Strategic Marketing
- Human Resources Management
- Business Management

APPLY NOW

**ENGLISH Language Courses** (04 MONTHS)

- Diploma in English
- Spoken English For Youth
- Business English
- English for Job Seekers

இரண்டு பாடநெறிகளை இணைத்து கட்டணக் கழிவுடன் DUAL DIPLOMA பெறும் வாய்ப்பு!

## யாழ்ப்பாணம் திரைப்படக் கல்லூரி
## Jaffna Film College



துறைசார் கற்கை நெறிகளுக்கான தேடல் உள்ளவரா நீங்கள்..?
அப்படியாயின் உங்களுக்கான மிகச்சிறந்த வாய்ப்பு இதோ!!

DREAM CARRIER OPPORTUNITIES

- DIPLOMA IN PHOTOGRAPHY
- DIPLOMA IN FILM MAKING

யாழ்ப்பாணம் திரைப்படக் கல்லூரி / Jaffna Film College
உங்கள் திறமைக்கும். தேடலுக்குமான வழிகாட்டி
No:15, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna

021 222 4550 | 076 138 0212

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

(C-1807)

**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், சுன்னாகம், மல்லிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-1000/=Kg**

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-1767)

0768226240 DHL

## மலிவு விலையில் பூக்கள் விற்பனைக்கு

மல்லிகை, றோஸ், ஓர்க்கிட், செவ்வந்தி, சாமந்தி, தாமரை
(வாடாமல்லி, ஊர்றோஸ் கொள்வனவு செய்யப்படும்.)

(6359)

☎-077 112 5550

## அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/=
070 3305500
077 888 9388

(C-1768)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| சங்கானை | பளை | மல்லாவி |
| ஆவரங்கால் | கிளிநொச்சி | மன்னார் |
| நெல்லியடி | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| சங்கத்தானை | முல்லை | கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## தரம் 5 புலமைப் பரிசில் – 2021

மாதிரிப் பரீட்சைகளும் விசேட வகுப்புகளும்

ஆரம்பம் :- 28.03.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணி

புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் முதற்தர மாதிரி வினாத்தாள் **"புலமைச் சிட்டு"** (நாவலர் வெளியீடு)

ஞாயிறு தோறும் விரும்பிய 6 நேரங்களில் பரீட்சை

காலை - 8.00, 9.00, 10.00 மணி மாலை - 2.00, 3.00, 4.00 மணி

பரீட்சை நிலையம்

புதிய நாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

- வெளி மாணவர்களும் பரீட்சைக்கு தோற்ற முடியும்.
- அதிகூடிய புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு சிறப்பு பரிசில்கள் வழங்கப்படும்.

(C-1818)

விசேட வகுப்புக்கள்



- வாரத்தில் 5 நாட்களும் வகுப்புக்கள்.
- ஆசிரியரின் தனிப்பட்ட கவனிப்பு.
- பாடத்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்படும்.
- ஒவ்வொரு வகுப்பிலும் 40 மாணவர்கள்.

☎-077 459 8440

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.